ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு ௮	மெய்கண்டான்யாண்டு-௭௱௭ மாசித் திங்கள் 1930௵ பிப்ரவரி௴—மார்ச்சு௴	பரல் ௨

திருச்சிற்றம்பலம்

மடித்தாடு மடிமைக்க ணன்றியே மனனேநீ வாழுநாளுந் [வான்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்
கடுத்தாடு கரதலத்திற் றமருகமு மெரியகலுங் கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்று
[மன்றே.

சுந்தரர்.

உரை.

மடித்து, மாறுபட்டு; ஆடும், உடனிருக்கும்; 'சலதியொடாடி' யென்னுமிடத்து அதன் உரைகாரர் அடியார்க்குநல்லார் "ஆடுதல் உடையனாதல்" என்று உரைத்தமை காண்க. மடிமை, சோம்பல்; 'சோம்பலில் நிற்றலேயல்லாமல், மனனே, நீ அதனினின்றும் நீங்கி உலக வாழ்வில் முயற்சியுற்று வாழு நாட்களிலும் கூற்றுவன் தமர்கள் நின் வாழ்வைத் தடுத்து அலைத்துச் செக்கிலிட்டு ஒறுக்குங்கால் புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமான் தடுத்தாட் கொள்வான் என்க. விரைந் தாடு கரதலம் ஈண்டுக் 'கடுத்தாடு கரதல' மெனப்பட்டது. தமருகம், உடுக்கை; இது நாதத்துக்கு அறிகுறியாம். 'எரியக' வென்பது எரி,

யெரியும் அகல்; புலியூர், தில்லை புலிக்கால் முனிவர் வழிபட்ட ஊராக லின் அந்த அப்பெயர் பெறுவதாயிற்று. பெற்றுமென்னும் பன்மை தன்னோடு மனனத்தைங் கூட்டியுரைத்தவாறும்.

பாரூரு மரவல்கு லுமைநங்கை யவள் பங்கன் பைங்க ணேற்ற
னூரூரன் றருமனூர் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கோள்வா
னாரூரன் றம்பிரா னாரூரன் மீகோங்கி லணிகாஞ் சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்று மன்றே.

'ஊர் ஊரன்', சிவபெருமான், பிச்சைக்காக ஊரூராய்த் திரிபவ னென்பது. 'ஆரூரன்றம்பிரா' னென்ற விடத்து, ஆரூரன் என்றது, நம்பியாரூரர் தம்மைக் கூறிக்கொண்டபடியாம். பின்னர் ஆரூரன் என்பது திருவாரூரன் என்றற்கு; ஆவது திருவாரூரின்கண் எழுந்தருளியிருக்குஞ் சிவபிரா னென்க. மீ, மேற்கென்னும் பொருட்டு. கொங்கு. ஒரு நாடு; இப்பாட்டில் ஆரூரும், கொங்கும், காஞ்சியும், பேரூரும் புலியூருடன் கூறப்பட்டன. காஞ்சி யென்றது, நீட்டல் முற்பாட்டில் வந்த மனனே' என்பதை ஈண்டுங் கொள்க.

செடியேன் றீவினையிற் றடுமாறக் கண்டாலும்
அடியா னவவென தொழித றகவாமே
முடிமேன் மாமதியும் மரவும் முடன்றுயிலும்
வடிவே தாமுடையார் மகிழுங்கழிப் பாலையதே.

செடியேன் தீயேன்; ஆவ, வியங்கோள்; மேம்படுக வென்பது, எனது நீங்குதல் தகவாகுமோ என்க; இவ்வேகாரம், வினா; ஏனையிரண்டும் அசைகள். கழிப்பாலையது என்பதில், அது பகுதிப்பொருள் விகுதி; கழிப்பாலையது ஒழிதல் தகவாமே என்று வினைமுடிக்க; பொருட்டன்மை அது திகழும் இடத்தின்மேல் ஏற்றிக் கூறப்பட்டதாகும்.

இத்தனை யாமாற்றை யறிந்திலே னெம்பெருமான்
பித்தரே யென்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை மாணிக்க முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

இத்தனையாமாற்றை இவ்வளவாகும் வகையை; என்றது சுந்தரர் தாம் திருக்குருகாவூரை நோக்கி வழிக்கொண்டு பசியாலுந் தாகத்தா

லும் வருந்துங்கால் இறைவன் தமக்குக் குளிர்ம்பந்தரமைத்துத் தண்ணீ ரும் பொதி சோறும் அருளிச்செய்த அருட்டிறங்களை யெல்லாமென்க. சிவபிரான் பித்தராகா ரென்றற்குப் 'பித்தரே யென்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம்' என்றார். 'முத்தினை மணிதன்னை' யென்பனவெல்லாம் படர்க்கை முன்னிலை வழுக்கள். உள்ளுருகிக் கூறுமிடங்களில் இவ்வாறு நேர்தல் மரபேயாம், வெள்ளடை அத்திருப்பதியிலிருக்குந் திருக்கோயி லின் பெயர்.

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனாக வுண்பலிக் குழல்வானே
காடுநின் னிடமாகக் கடுவிரு ணடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

'பசிதீர்ப்பா' யென்றது மேற்காட்டிய வரலாற்றைக் கருதியென்க; பலி, பிச்சை; கடுவிருள், மிக்கவிருள். ஆவது நள்ளிரா வேடன், நட மாடுந் திருக்கோல முடையவ னெனினுமாம்.

வளங்கனி பொழின்மல்கு வயலணிந் தழகாய
விளங்கொளி குருகாவூர் வெள்ளடை யுறைவானை
இளங்கிளை யாரூரன் வனப்பகை யவளப்பன்
உளங்குளிர் தமிழ்மாலை பத்தர்கட் குரையாமே.

வளங்கனி, தசைகொழுவிய பழம்; விளங்கொளி, வினைத்தொகை; உறைவான், வினையாலணையும் பெயர்; கிளை, வகை; இளமைப் பருவ வகையையுடைய ஆரூரன் என்க; அன்றிக் கிளை, ஒளியுமாம்; வனப் பகை, கோட்புலி நாயனார் திருமகள்; அவள், பகுதிப்பொருள் விகுதி: ஏ, அசை.

இளவழகனார்.

தலைமைப் பேருரை

(௧௮-ம் பக்கத் தொடர்ச்சி)

கடவுள் உண்டென்ற சமயங்களெல்லாம் அவரைக் குறியீடாகவும் மக்கள் சாயலாகவுமே அமைத்துள்ளன (i.e., the Conception of God is symbolical and anthropomorphic). எந்தத் துறையில் சென்று பார்த்தாலும் மொழிகளால் வெளியிடுவதென்றால் மக்கள் சாயலாகத்தான் பேச இயலும் (i.e., Human expression is inevitably anthropomorphic) என்று ஆசிரியர் வில்லியம் கெல்லி ரைட் கூறுகிறார். மலையின் உச்சி, ஊசியின்கண், புத்தகத்தின் காது, ஆற்றின் முகத்துவாரம், கெடியாரத்தின் கைகள், நாற்காலியின் கால்கள், மலையின் அடிவாரம் (i.e , the eye of a needle, the ears of a book, the mouth of a river, the hands of a clock, the legs of a chair and the foot of a mountain) என்றெல்லாம் மக்கள் உறுப்புக்களை வைத்து நாம் சொல்வதுதானே வழக்கம். நாற்காலியின் கால்களைக் குறிப்பிடுதற்குக் "கால்கள்" என்ற சொல்லைத் தவிர வேறே எந்தச் சொல்லும் எந்த மொழியிலும் வழங்கப்படுவதில்லை. அறிவியல் துறையில் பார்த்தால் ஓர் அணு மற்றொன்றை "அமுக்குவ"தாக (i.e., presses)த் தானே கூற முடியும். ஆகையால் கடவுள் படைப்பில் எந்தப் பொருளையும் அளப்பதற்கு மனிதனே அளப்பவனுமாகிறான், அளவு கோலுமாகிறான் (i.e., man is both the measurer and the measure of the Universe). ஆகையால் கடவுளை மக்கள் சாயலாகத்தான் வைத்து அறியமுடியும். வேறு வழியில்லை. எனவே, கடவுளை எண்குணத்தராகக் குறியீட்டிலும் மக்கள் போன்றவராக உருவத்திலும் வழிபடும் நமது சமயக் கொள்கைக்கு இழுக்கென்னை? உருவ வழிபாடு கூடாதென்று கூறும் மேதாவிகட்கு நான் ஒன்று கூற விரும்புகிறேன். உருவ வழிபாடு கூடாதென்னும் ஆங்கில பிராடெஸ்டண்டு கிறிஸ்தவர்கள் யூனியன் ஜாக் என்னும் கொடியை வணங்குகிறார்கள். ஏன்? அந்தக் கொடி ஒரு குறியீடாகயிருக்கிறது. வெள்ளையும் சிவப்

பும் நீலமும் கலந்த ஒரு முழம் துணி என்றெண்ணி ஆங்கில மக்கள் அதை வணங்கவில்லை. தங்கள் தேசத்தின் பெருமையையும் உரிமையையும் இன்னும் பலவற்றையும் அது குறிப்பதாகவே நினைந்து வணங்குவதுமன்றி அக்கொடி நிலைப்பதற்காகப் போர்க்களத்திலும் ஆயிரக் கணக்கானவர் உயிர் துறக்கின்றனர். "A flag is a symbol. Taken literally, a national flag is only a bit of brightly coloured bunting; but vast libraries of history and constitutional law only imperfectly express what the flag symbolises" என்று ஆசிரியர் ரைட் கூறுகிறார். உருவ வழிபாடு கூடாதென்கிற சுயமரியாதை வீரர்கள் தங்கள் மகாநாடுகளில் மட்டும் கொடியேற்று விழாவை ஏன் நடத்த வேண்டும்? அப்படிச் செய்துவிட்டுத் திருக்கோயில் கொடியேற்று விழாவை ஏன் தூற்றவேண்டும்? இங்கிலாந்து தேசத்துக்குச் செல்லும் வேற்று நாட்டரசர்களும் பிரமுகர்களும் செனொடாப் (the Cenotaph) என்ற கல்லறையில் பேருரில்லாத வீரன் சமாதிக்கு (the tomb of the unknown warrior)த் தவறுமல் புஷ்பார்ச்சனை செய்கின்றனர் (laying wreaths). பேருரில்லாத வீரனுக்கா அந்த அர்ச்சனை? அல்ல அல்ல. தேசபக்தியின் மேலீட்டினுல் அவன் உயிர்துறந்த தியாகபுத்தியின் மேன்மைக்கே அந்த அர்ச்சனை நடக்கிறது. அத்தகைய அரிய செம்பொருளுக்கு அவ்வெளிய கல்லறையே குறியீடாக நிற்கின்றது. அக்கல்லறைக்கே அர்ச்சனை, திருவிளக்கேற்றுதல் முதலிய உபசாரங்கள் நடக்கின்றன. ஆனால் கல்லறைக்குச் செய்த உபசாரம் அது குறிக்கும் செம்பொருளைப் போற்றுவதாகத் தான் எல்லா மக்களாலும் கருதப்படுகின்றது.

அஃதே போல் உலகத்திலுள்ள எல்லாச் செம்பொருள்களுக்கும் உறைவிடமாகவுள்ள கடவுளுக்கு உருவ வழிபாடு உண்டு. புலாலுண்டு, கள் குடித்து, தோள்வலிபெற்ற ஒருவன் குதிரை யேறிய மதுரைவீரனுக்குப் புலால், கள் முதலியன கொடுத்து அவனைக் கடவுளாக வணங்குகிறான். சிவலிங்க வழிபாடு செய்யும் பேரறிஞர் மதுரைவீரனைக் குறைவாகவே

எண்ணுவர். அஃதே போல் மதுரை வீரனைத் தொழுவோர் சிவலிங்கத்தை ஆண்குறி பெண்குறியாகவே எண்ணுவர். ஏனெனில் மீன மேஷ ரிஷபங்களைத் தின்னும் அப்பெரியார்கட்கு மிதுனத்துக்கு மேம்பட்ட தத்துவங்கள் புலப்படா. அறவொழுக்கத்தில் சிறந்து, இருவினை யொப்பு, மலபரிபாகம் கைவரப் பெற்றவர்கட்கே அச் சிவலிங்கம் திருவைந்தெழுத்தின் திருவுருவமாகவும், கடவுள் படைப்பிலுள்ள எல்லாத் தத்துவங்களையும் தன்னுள்ளடக்கிய சிறந்த ஒப்புயர்வற்ற குறியீடாகவும் காணப்படும். "இருஞ்சுரபிக் கெங்கும் உருக்காணவொண்ணாத பால் முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல் வெளிப்பட்டருளுவன் அன்பர்க்கே" என்ற எங்கள் சித்தியார் வாக்குப்படியே அச் சிவலிங்க உருவம் அருள் பாலிக்கும்.

இஃதே போல் ஆராய்ந்து சென்றால் சமயச் சடங்குகள், மந்திரங்கள், சின்னங்கள், ஜெபம், முறையீடு முதலியவைகளின் உண்மையும் உட்கருத்தும் நன்கு விளங்கும். இவ்வாராய்ச்சிக்கு ஆசிரியர் ரைட் எழுதிய "A Student's Philosophy of Religion" என்ற நூலும், அவரைப் போன்ற வேறுபல நல்லாசிரியர்கள் நூல்களும் பெரிதும் துணை செய்கின்றன. இவ்விடத்தில் பாவம், பாவத்துக்குத் தண்டனை யென்பதைப் (i.e., the problem of evil) பற்றி இரண்டொரு வார்த்தைகள்கூற விரும்புகிறேன். நமது சமயத்தில் பாவமன்னிப்பு கிடையாதென்றும், கர்மவிதி மிகக் கொடியதாகவிருக்கிறதென்றும் (i.e. the law of Karma is inexorable) பலர் எண்ணுகிறார்கள். இது பெருந்தவறு.

"எத்தன்மை குற்றம் இயற்றிடினும் தாய்பொறுக்கும்
அத்தன்மை நின்னருளும் அன்றோ பராபரமே"

என்றும்,

"அழிப்பு இளைப்பாற்றல்"

என்றும்,

"மண்ணுளே சில வியாதி மருத்துவன் அருத்தியோடுந்
திண்ணமா யறுத்துக் கீறித் தீர்த்திடுஞ் சிலநோ யெல்லாங்
கண்ணிய கட்டிப் பாலும் கலந்துடன் கொடுத்துத் தீர்ப்பன்
அண்ணலும் இன்ப துன்பம் அருத்தியே வினையறுப்பன்"

என்றும்,

"குற்றம் செய்யினும் குணமெனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்"

என்றும்,

"இவனுலகில் இதம்அகிதம் செய்த வெல்லாம்
இதம்அகிதம் இவனுக்குச் செய்தார்பால் இசையும்
அவன் இவனாய் நின்றமுறை ஏகனாகி
அரன் பணியில் நின்றிடவும் அகலும்குற்றம்
சிவனும் இவன் செய்தியெலாம் என் செய்தியென்றும்
செய்தது எனக்கு இவனுக்குச் செய்ததென்றும்
பவம் அகல உடனாகி நின்றுகொள்வன் பரிவால்
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே"

என்றும் அழுத்தம் திருத்தமாக விளக்கும் ஆன்றோர் வாக்குகள் நிறைந்த திருவருள் நெறி ஊற்றெடுத் தோடும் சைவசித்தாந்த சமயத்தில் கர்மவிதி மிகக் கொடிதென்றும், பாவ மன்னிப் பில்லையென்றும் பிதற்றுவாரின் பேதைமை ஞாலத்தின் மாணப்பெரிது

என தருமைச் சகோதரி சகோதரர்களே! இதுகாறும் கூறியவாற்றால் உலகத்திலுள்ள எல்லாச் செம்பொருள்களும் நமது சைவசித்தாந்த சமயத்தில் உள்ளனவென்றும், அச்சமய நெறி உண்மைநெறி யென்றும் மக்கள் சென்று பயன் பெறுதற்குரிய செந்நெறி யென்றும் கண்டோம். இதைச் செந்நெறி யென்று காணும்வரை இதில் கூறியுள்ள வழிபாடு, கொள்கை, சின்னம் முதலியவைகளை ஏன் கைக்கொள்ள வேண்டும் என்று பட்டப் பெயரை நீத்த பெரியார்களும் திருநீற்றைக் கைவிட்ட துறவிகளும் கேட்கின்றார்கள். இவர்கட்கு ஆசிரியர் ரைட்டையே விடைகூற ஏவுகின்றேன். உண்ணும் உணவு எவ்வாறு ஜீரண

மாகி இரத்தமாக மாறுகிறது என்ற முறையின் நுட்பங்களை உணர்ந்தார் இவ்வுலகத்துள்ள மக்களுள் கோடிக்கு எத்தனை யாக இருப்பார்கள்? மிகக் குறைவே யென்பது வெளிப்படை. ஆனால் அந்த நுட்பங்களை யறிந்தே உண்ணுவோம் என்று சபதங்கூறி உண்ணுவிரதம் கைக்கொள்ளுவோர் எத்தனைபேர்? ஒருவருமே யில்லை ("Would it be intellectually dishonest for a man to continue to eat food until he had definitely decided the question of digestion? In any event, food is digested and he needs it to support life—the theoretical question can be solved at his leisure or never at all"). இச் சுயமரியாதைத் துறவிகள் மற்றொரு வாதமும் செய்கின்றனர். அதாவது ஒவ்வொருவனுக்கும் தனக் கிஷ்டமான மதக்கொள்கையைக் கடைப்பிடிக்க உரிமை யுண்டென்பது (i.e., freedom of thought.) இதற்கும் ஆசிரியர் ரைட்டே விடை கூறுகிறார். "Whenever a student consulted me privately, I advised him to continue in the religious faith and associations in which he had been brought up, unless he had formed deep and rationally grounded convictions that rendered this impossible, which was very rarely the case." அதாவது சுருக்கமாக மதக்கொள்கைகளை மாற்றக்கூடா தென்பதே. இக்கரைக்கு அக்கரை பச்சை என்று மாறுவது விலங்குகளின் தொழில், ஆறறிவுடைய மக்கள் தொழிலல்ல. தன் சொந்த வீட்டை விட எதிர் வீடு நன்றாக யிருக்கிற தென்று மாறினால் எதிர் வீட்டுக்காரன் அடிக்கிறான். தன் மனைவியாளை விட எதிர் வீட்டுப் பெண் அழகி யென்று கைப்பற்றினால் அவள் தலைவன் கொல்லுகிறான். சமயக் கொள்கைகளை மட்டும் சட்டைகளை மாற்றுவதுபோல் மாற்றினாலும் ஏன் ஒருவரும் கேட்கிறதில்லை?

முன்காலத்தில் சமயத்தலைவர்கள் இருந்தார்கள், கேட்டார்கள். இக்காலத்திலோ அத்தலைவர்களின் மடங்களும் அவைகளின் திரண்ட பெருநிதியும் மட்டும் உள்ளன. தலைவர்களைக் காணோம். தலைவர்கள் ஆணைவழி நின்று சமய போதனை

செய்த ஆன்றோர்களையும் காணோம். ஐம்புலன்களை வென்று ஆண்டவர்களைக் காணோம். அவர்கள் இருந்த இடத்தில் ஐம் புலன்களுக்கு ஏவல் செய்யும் அடிமைகளே யிருக்கிறார்கள். இத் தலைவர்களின் பெருநிதி சமய போதனைக்கே அக்காலத்தில் வழங்கப்பட்டது. இக்காலத்திலோ இப்பெருநிதி, முகமன் புறங்கூறும் நேயர்கட்கும், துர் நாரியைச் சேர்ப்பிக்கும் தூயர் கட்கும், லாவென்று சதிகூறும் லாயர்கட்கும், மன்பதையை வஞ்சிக்கும் மாயர்கட்கும், தான் தேடாப் பொன்னுக்கு மாற்று மில்லை உரையுமில்லை யென்ற முறையில் வாரி வாரி இறைக்கப் படுகின்றது. வாங்குங் கவளத் தொரு சிறிது வாய்தப்பின் தூங்குங்களிறோ துயருறாது. சிந்திய கவளச் சிதைவைத் தின்ற ஆயிரம் சிற்றெறும்புகள் இன்புறும். இம்முறையிலேயே இம் மடங்களில் சிந்தும் பொருளைக் கொண்டு சமய போதனை செய் யலாம் என்று சிற்சில அன்பர்கள் உண்மையாகவே எண்ணி யுள்ளார்கள். இதைவிட மானக்குறைவு வேறொன்றுண்டோ? அந்தோ! கொடிது!! கொடிது!! அரசனில்லாத நாட்டுக்கு அரசியற்றலைவரைத் தேர்ந்தெடுப்பது போலவே, இப்போலித் தலைவர்களைச் சட்ட முறைப்படி தொலைத்து சீரிய தலைவர்களைத் தேர்ந்தெடுக்குமட்டும் சைவ சமயிகள் ஈடேறுவது இயலாது என்பதைக்கற்றுத் துறை போய ஒழுக்கச் சீலர்களாகிய உங்கள் முன்பு மிகத் தாழ்மையுடன் விண்ணப்பம் செய்து கொள்ளு கிறேன். சேற்றின் நடுவில் செந்தா மரை திகழ்வதைப்போல் இம் மடாதிபதிக் குழுவில் இரண்டொரு சீலர்களும் உளர். எனினும் சீர்திருத்தம் நடந்தே தீரவேண்டும்.

மெய்யன்பர்களே! மதக்கொள்கைகளை மாற்றுவது தவறென்று கண்டோம். இவ்விடத்தே ஆங்கிலக் கல்வி முதிர்ந்த பெரியார்கட்கு ஒன்று கூறுதும். "இராமன் ஆண் டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன?" என்ற பழமொழி இத்தமிழ் நாட்டில் வழங்குகின்றது. இதன் பொருள் இவ்விரு வரும் செங்கோல் செலுத்திய முறையில் வேற்றுமை யொன்று மில்லை யென்பதல்ல. யார் ஆண்ட போதிலும் குடிகள் தங்கள்

ஒழுக்கங்குன்றாது ஒழுகுவார்கள் என்பதே இதன் பொருள். நம் இந்திய தேசத்திலுள்ள ஏழு லக்ஷம் கிராமங்களிலும் நடைபெற்று வரும் ஒழுக்கம் இலேசாக மாறுவதில்லை. ஆகவே கிராமச் சீர்திருத்தம் (rural reconstruction) செய்யவேண்டுமென்று வாய்ப் பறையறையும் ஆங்கிலக் கல்வியாளர்கள் கிராமத்தில் காணப்படும் ஒழுக்க மாறுபாடின்மையை (conservatism in culture and tradition) முதலில் கற்றுக்கொள்ள வேண்டும். இலேசாக நாளுக்கு நாள் கொள்கைகளையும் ஒழுக்கங்களையும் மாற்றக்கூடாது. காலஞ் சென்ற திரு. ம. ரா. குமாரசுவாமிப் பிள்ளையவர்கள் இத்தமிழ் நாட்டில் எத்தனை உயிர்க்கோணலோ அத்தனை மயிர்க்கோணல்கள் உள்ளன என்று நகைச் சுவை ததும்பக் கூறுவார்கள்.

வேறொரு எச்சரிக்கையும் செய்யக் கடமைப்பட்டுள்ளேன். ஆங்கிலம் கற்றவர்கள் நமது சமய நூல்களை முறைப்படி கற்று, மேல் நாட்டு அறிவியல் நூல்களையும், தத்துவ, சமய நூல்களையும் பயின்றால் நமது சமய நூல்களிலுள்ள உண்மைகளெல்லாம் மிக நன்றாய்ப் புலப்படும் என்ற கொள்கையில் எனக்குத் திடமான நம்பிக்கையுண்டு. ஆனால் இவைகளை மிக ஆழ்ந்து கற்று ஆராய வேண்டும். இன்றேல் மேல் நாட்டவர் கொள்கைகளே மேம்பட்டவை என்றாவது, அவர்கள் கொள்கைகளுக்கும் நமது கொள்கைகளுக்கும் பேதமில்லை யென்றாவது தோன்றும். இது ஆழ்ந்து சிந்திக்காததினால் நேரும் குறைபாடு. மேல் நாட்டு நூல்களைக் கற்கும் சிலர் சைவசித்தாந்தம் மேல் நாட்டுக்குச் சென்று விட்டது என்று கூறுகின்றார்கள். இவ்வாறு கூறுவது சைவ சமயத்தின் தற்கொலையேயாகும். மேல் நாட்டினர் நமது பஞ்சைக்கொண்டு போய்ப் பஞ்சவர்ணச் சேலைகளாக்கி நமக்கே ஒன்றுக்குப் பத்தாக விற்கிறார்கள். இப் பஞ்ச வர்ணங்களும் நமது கண்ணையும், பொன்னையுமே யன்றி மண்ணையும் பெண்ணையும் கூடக் கவருகின்ற சக்தியுடையனவாயிருக்கின்றன. ஆனால் உண்மையிலே, இப்பஞ்சவர்ணமானது இத்தேசத்திற் குடிகொண்டுள்ள பஞ்சத்தின் வர்ணத்தையே

குறிக்கின்றது. அங்ஙனே போல் மேல் நாட்டவர்கள நமது சமயக்கொள்கைகளையும் கொண்டு போய் அவர்கள் சமய இயந்திரத்திற் கொடுத்துப் புதுப்பித்து வேறு கொள்கைகளாகவே நமக்கு வழங்குகிறார்கள். ஒரே சிறு உதாரணம் கூறுவேன். ஆசிரியர் ரைட் என்பார் முத்தியைப் பற்றிக் கூறும்போது பாஷாணவாதம், ஐக்கியவாதம், சமவாதம், விவேகமுத்தி முதலியவைகளை யெல்லாம் புறக்கணித்துக் கூறுவது எனக்குப் பெரும் வியப்பை விளைவித்தது. அவரை அம்மட்டில் உண்மை ஞானியாகவே கருதுகின்றேன். "What the author favours, then is an immortality in which separate individuals shall persist, know one another, and enjoy a mutual society; but that this existence shall be in God, and not as souls separated from Him and from one another by physical bodies as is now the case." இவ்வாறு கூறப்பட்டுள்ளதே சைவசித்தாந்தமுத்தி யென்று உடனே முடிவுகட்டி விடக் கூடாது.

"ஆதவன்தன் சந்நிதியில் அம்புலியின் ஆர்சோதி
பேதமற நிற்கின்ற பெற்றிபோல்—நாதாந்தத்து
அண்ணல் திருவடியில் ஆன்மா வணைந்துஇன்பக்
கண்ணில் அழுந்தியிடுங் காண்"

என்ற உண்மைவிளக்கச்செய்யுளிலுள்ள உவமையே மற்றெல்லா உவமைகளை விடச் சைவசித்தாந்தம் கூறும் பத முத்தியை மிகத் தெளிவாகத் தெரிவிக்கிறதென்று எனது சிற்றறிவிற்குப் புலனாகின்றது. இத்தகைய முத்திக்கும் ஆசிரியர் ரைட் கூறும் முத்திக்கும் உள்ள வேற்றுமையை நன்குணர வேண்டும். இவ்வாறு மேன் மேலும் பெருக்கிச் செல்லலாம். விரிவஞ்சி விடுக்கின்றேன்.

ஆகவே, நமது சமயக்கொள்கைகளை மேல் நாட்டவர் எவ்வாறு கையாளுகின்றனர் என்பதிலிருந்து, நமது கொள்கைகளின் நுட்பங்களைக் கூர்ந்த மதி கொண்டு அறிய வேண்டும். கையாளப்பட்டு, மாற்றப்பட்டு, மீண்டும் வெளிவரும் கொள்கை

களை நமது கொள்கைகளாகவே மீண்டும் காணுதல், நான் முற் கூறியபடி நமது சமயத் தற்கொலையாகவே முடியும்,

எனது அருமைச் சகோதரி சகோதரர்களே! முடிந்தது முடித்தலாக ஒன்றே கூறுகின்றேன். உங்கள் சமயக்கொள் கைகளையும் ஒழுக்கங்களையுப் சடங்குகளையும் வழிபாடுகளையும் எக்காரணங் கொண்டும் மாற்றுதீர்கள். மேல் நாட்டு அறிவியல், தத்துவ நூல், சமய நூல் முதலியவற்றின் துணைகொண்டு இக் கொள்கைகளும், ஒழுக்கங்களும், சடங்கு வழிபாடுகளும் எவ் வாறு மேல் நாட்டு நாகரிகத்துக் கேற்பத் திரிந்து அந்நாட்ட வர் வாழ்க்கைக்கு விழுப்பம் நல்குகின்றன என்பதை நுணுகி நுணுகி ஆராய்ந்துணருங்கள். அவ்வாராய்ச்சியை உண்மைச் சம யப்பற்றோடு ஆங்கிலக் கல்வியாளர்கள் நடத்துங்கள். உங்கள் சமயத்துக்கு அவ்வழியில் புத்துயிரும் புதுவன்மையும் தேடுங் கள். உங்கள் சமயப் போலித்தலைவர்களைச் சட்ட முறைப்படித் தொலைத்து அவர்கள் பெருநிதியை சமயப் பணிக்கே உரிய தாக் குங்கள்: உங்கள் முன்னோர்கள் காலத்தில் உங்கள் சமயத்துக்கு வந்த இடர்களைக் களைந்து காத்த சமயகுரவர்களைப் போற்றுங் கள். தூற்றுதீர்கள். பால்மணம் மாறுத எங்கள் ஞானச்சேயைப் புலால் மணம் மாறுத ஈனப்பேய்களே கொலை பாதகனென்னும். பரத்தையரைப் புணரும் பாமரமாக்களே, எங்கள் பரவைமணாள னைக் குறை கூறும். எங்கள் மணிவாச கனருளிய திருவாசகம் ஒரு வாசகத்துக்கும் உருகாத மனப்பாறைகட்கேறுமோ? தலை யெழுத்தின் துணை பிடித்துப் பிறவிக்கடலில் தடுமாறும் உயிர் கள், ஐந்தெழுத்தின் புணைபிடித்து வஞ்சகரிட்ட நீலநிறப்பெருங் கடலும், யார்க்கும் நீந்துதற் கரிதாம் ஏழுபிறப்பெனுங்கடலும் நீத்த பிரானடியை எவ்வாறு உணரும்?

அறவொழுக்கத்தில் உளம் பழுத்தல் என்ற செம்பொருளை வாழ்க்கையில் பதித்துக் கொள்ள இயேசு கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ஒன்றே சாதனம் என்று ஆசிரியர் ரைட் கூறுவதை நினையுங்கள். உங்கள் சமயத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு சாதனங்கட்கு நான்கு சமய குரவர்

களின் உண்மைச் சரிதைகளே யன்றி அறுபத்து மூன்று நாயன்மார்களின் உண்மை ஜீவிய சரிதைகளும் உள்ளன. அவைகளைப் பயின்று அவர்கள் சென்ற திருவருள் நெறியே செல்லுங்கள். சிவலிங்க வழி பாட்டைக் கைவிடாதீர்கள். திருக் கோயில் வழிபாடு அறிவு குறைந்தவர்கட்கே யன்றிக் கற்றறிந்த மேதாவிகட்குத் தேவையில்லை யென்று எண்ணாதீர்கள். கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழல் என்பதை மறவாதீர்கள். "செம்மலர் நோன்றாள் சேர லொட்டா, அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ மாலற நேய மலிந்தவர் வேடமும், ஆலயந் தானும் அரனெனத் தொழுமே" என்ற உபதேசம் முற்றத்துறந்த முனிவர்கட்கும் கூறப்பட்டதே.

> " பாசிபடு குட்டத்திற் கல்லினைவிட் டெறியப்
> படும்பொழுது நீங்கி அது விடும்பொழுது பரக்கு,
> மாசுபடுமல மாயை யருங்கன்ம மனைத்தும்
> அரனடியை யுணரும் போதகலும் பின்னணையும்,
> நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதே தாங்கு
> நினைவுடையோர் நின்றிடுவர் நிலையிது வேயாதும்"

என்ற எங்கள் சித்தியார் வாக்கை நினைவு கூருங்கள். உங்களுக்குப் பூசை செய்ய விருப்பமில்லாவிடில் பூசை செய்வோரை அழுக்கு மூட்டைகள் என்று ஏசாதீர்கள். பூசை, இறைவனிடம் முறையீடாகிய இவைகளால் மக்கள் அளவற்ற புதிய சக்தியைப் பெறுகிறார்கள் என்றும், ஒரு சமயத்தின் தத்துவ நுட்பங்களை அறியா விட்டாலுங் கூடப் பூசை முறையீடு செய்து இச் சக்தியைப் பெறலாம் என்றும் ஆசிரியர் ரைட் கூறுகிறார். ("We all possess considerable reserve powers of sub-conscious energy. One means of approach to such reserve powers is found through the agency of prayer. The efficacy of prayer is not dependent on the worshipper's understanding of the philosophy and psychology of the process. The efficacy of prayer is a matter of immediate experience; the existence and nature of God are difficult philosophical questions upon which it is

unnecessary for the worshipper to make up his mind in order to receive the benefits of prayer.")

சமயவுண்மைகளையும் ஒழுக்கங்களையும் நீங்கள் கற்பதோடு உங்கள் வயிற்றிற் பிறந்த பிள்ளைகட்கும் இளமையிலேயே கற்பி யுங்கள். பெண்களுக்கும் சமய போதனை கொடுங்கள். மக்கள் சமூகத்தில் ஒரு பாதி பெண்ணல்லவா? ஒரு பாதியை மறந்தால் மற்றொரு பாதியின் கதி என்னாகும்?

கற்பதோடும் கற்பிப்பதோடு மட்டும் நிற்காதீர்கள். கற்ற தற்குத்தக ஒழுகுவதே கல்வியின் பயன். "வாய் வாழைப் பழம் கை கருணைக் கிழங்கு" என்றொரு பழமொழி நமது நாட்டி லுண்டு. தேனொழுகத் தத்துவம் பேசுவதும் சமயப் பணிக் கென்று எவரேனும் பொருள் கேட்டால் மற்றொரு சமயம் வாருங்கள் என்று கூறுவதும் எத்தனை பிரபுக்களின் வழக்க மாக விருக்கிறது! உண்மையான சமயப் பணிக்கு "வேண்டு வார் வேண்டுவதே ஈ(வே)ன் கண்டாய்" என்று ஒவ்வொரு செல் வனும் பறையறைதல் வேண்டும். இவ்வுண்மையே அறுபத்து மூன்று நாயன்மார்கள் திவ்விய சரித்திரங்களிற் கிடைக்கும் செம்பொருள். சமயப்புரட்டர்கள் நமது சமயக் கொள்கை களைத் திரித்தும் தாக்கியும் கூறினால், தாக்ஷண்யத்துக்காகவோ, தன்னலத்துக்காகவோ வாளாவிருக்காதீர்கள். பெறுதற்கரிய பதினாறு பேறுகளுள் சைவ நிந்தனை பொறாமனம் தலை சிறந்தது. வாளா விருப்பின் சைவ நிந்தனை யென்ற குற்றமே, உடன் பாடான உங்களையும் சாரும். இக்குற்றம் கொடிது, கொடிது, இதற் காளாகாதீர்கள். உங்கள் சமயத்தை விளக்குவது உங் கள் கடமையாயிருப்ப, அதையும் செய்யாது, மாற்றான் உங்கள் சமயத்தைக் குறை கூறுங்கால் அதையும் மறுக்காது வாளா விருந்தால் உங்கள் அறிவையும் செல்வத்தையும் எற்றுக்கோ பயன் படுத்துவது?

சிவஞானச் செல்வம் கைவரப் பெற்ற விழுமியோர்களே! தொன்று தொட்டு வரும் முறையை விடுத்து ஆங்கில முறை பற்றி யான் பேசியதற்கு மன்னியுங்கள். ஆங்கிலக் கல்வி நிரம்

பிய பெரியோர்களே! உங்கள் மனம் புண்படக்கூடிய வகையில் யான் ஏதேனும் கூறியிருப்பின் மன்னியுங்கள். அது நான் அறியாது எண்ணாது செய்த குற்றமாகும். என தருமைச் சகோதரி சகோதரர்களே! இது காறும் செவி மடுத்து அன்போடு என் புன்மொழிகளை யேற்ற உங்கள் பொறுமைக்கு மெச்சினேன். என்னையுமோர் பொருளாக்கி இங்கு அமர்த்திய உங்கள் பெருந்தகைமைக்கும் மெச்சினேன். அறிவின்மையாலும் போதின்மையாலும் வேறு பலபொருள்களை விளக்காது விடுத்தமைக்கு வருந்துகிறேன். எல்லாம் வல்ல இறைவன் திருவருள் நம் மெல்லோரையும் காத்தருள்வதாக. சைவ நன்னெறி தாந்தழைத்தோங்குக. தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்ட வர்க்கும் இறைவா போற்றி."

மரமும் புலவரும்.

[திருவாளர் எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை B A.,L.T.]

1. ஆலமரம்.

புலவர் பல மரத்தை உவமானமாக உண்மைப் பொருள் வெளியிடற் பொருட்டு வழங்கி யிருக்கின்றனர். தென்னாட்டில் மிகுதியாகக் காணப்படும் மரம் ஆலமரம். ஆல மரம் பரந்த நிழலைத்தரும். அதில் "அண்ணல் யானை அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு மன்னர்க் கிருக்க நிழலாகும்மே" என்றனர் நறுந் தொகையாரும்; ஆல மரத்தின் விழுதுகள் பல தரையிற் பதிந்து மரக் கிளைகளைத் தாங்கும் தூண்கள் போல் விளங்கும். பெற்ற தாய் வயது முற்றித் தளர்த லடையுங்கால் தாய்க்குத் துணையாகிக் குடும்பத்தைக் காப்பாற்றும் பிள்ளைகளை ஒப்பன விழுதுத் தூண்கள். பூவாதே காய்க்கும் கோளி யெனும் இம் மரத்தின் கனிகள் பல்லாயிரக் கணக்காயுள.

அவை பல்லாயிரம் பறவைகட்கு உணவாகின்றன. ஆலும் வேலும் பல்லுக் குறுதி யென்ற முது மொழியால் ஆலம் வீழ்து பற்பொடியாகச் செய்யப்பெற்று உபயோகப் படுத்தினால் கருவேல மரம் பட்டையினின்று தயாராகும் பற் பொடி போன்று பல்லுக்கு உறுதி கொடுக்கு மென்பதே. ஆலம் பழத்திலுள்ள வித்து சிறு மீன் சினையினும் நுண்ணியதே யாயினும் அதினினின்று முளைத்து வரும் கண்மரமாகிப் பல கிளைகளைத் தாங்கிப் படர்ந்த நிழலையளிக்கு மாதலின் சிறு செய்கையால் பெரும் பயனடையலா மென்ற உண்மை அறியற் பாலது. 'உருவு கண்டெள்ளாமைவேண்டும்' என்றனர் புலவரும். ஆலமரத்தில் தெய்வம் உண்டென்பர். ஆலிலையின் மீது திருமால் மேவியுளரென்ற கொள்கையும் உளது. பாண்டியன் பெருவழுதியைக் கூறுமுகத்தான் காரிக்கண்ணனார் ஆலமரத்தின் பெருமையை யெடுத்தோதி யுள்ளார்.

" முழு முதல் தொலைந்த கோளியா லத்துக்
கொழு நிழல் நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது
நல்லிசை முது குடி நடுக்கறத் தழீஇ
இளைய தாயினும் கிளையரா வெறியும்
அருநரை யுருமிற் பொருநரைப் பொறாச்
செருமாண் பஞ்சவர் ஏறே"

பெரும்பதுமனார் பாண்டியன் நன்மாறன் வண்மையை விளக்குங்கால் ஆலமரத்திற்குப் புள்ளினம் நாள்தொறும் மாறி மாறிப் போதலைக் கூறியுளார்.

' கடவு ளாலத்துத் தடவு சினைப்பல் பழம்
நெருநல் உண்டனம் என்னாது பின்னும்
செலவா னவே கலிகொள் புள்ளினம்
அனையர், வாழியோ இரவலர்.'

அதே பாண்டியனுடைய செல்வத்தை வடமவண்ணக்கன் பெரிய சாத்தனார் ஆல மர உவமையால் வெளிப் படுத்திய அடி ஈண்டு வருவ தாகும்.

‘ ஆலமர் கடவு ளன்னநின் செல்வம்
வேல்கெழு குரிசில் கண்டேன்’

ஆலிலையின்கண் மேவிய திருமால்போலும் நின்னுடைய செல்வத்தை யெல்லாம் வேலையுடைய தலைவ, கண்டேன். மற்றோர் உரையாவது ஆலின்கீழ் அமர்ந்த முக்கட் செல்வனாகிய கடவுளை யொப்ப என்றும் நிலைபெற்றிருப்பேன் என்றிருக்கின்றனன் என்பது.

புள்ளெலாம் சென்றணுக ஆலமரம் பயன்பட்டு நின்றாற் போன்று இவனும் தன் சுற்றத்தாரும் பிறரும் நாட்டாரும் நுகரும்படி நின்றனன்.

‘ முன்னூர்ப் பழுனிய கோளியா லத்துப்
புள்ளார் யாணர்த் தற்றே யென் மகன் வளனும்.

பின் வருவது கூகைக் கோழியார் கூற்று.

‘ நிலம் பக வீழ்ந்த அலங்கல் பல்வேர்
முதுமரப் பொத்திற் கதுமென இயம்பும்
கூகை கோழி யான’

ஊன் பொதி பசுங்குடையாரும

‘ பழுமர முள்ளிய பறவை போல
ஒண்படை மாரிவீழ் கனிபெய்தெனத்
துவைத்தெழு குருதி நிலமிசை பரப்ப’

என்றனர்.

2. உன்ன மரம்.

பாலையில் உண்டாகும் உன்னமரம் நாட்டகத்துக்குக் கேடு வருங்கால் உலறியும், கேடுவராத காலம் குழைந்தும் நிற்குமென்பது கொள்கை. இதற்குத் தொல்காப்பியத்தில் உன்ன நிலை யென்று உவமித்துளர். நச்சினார்க்கினியர் உரை வருமாறு:—‘வேந்தன் கருத்தா னன்றி அவன் மறவன். வேந்தற்கு நீ வெற்றி கொடுத்தால் யான் நினக்கு இன்னது செய்வலெனப் பரவுதலும், எம் வேந்தற்கு ஆக்கம் உளதெனின் அக்கோடு பொதுள்க எனவும் பகை வேந்தற்கு ஆக்கம் உளதெனின் அக்கோடு படுவதாக எனவும் நிமித்தம் கோடலும் என இரு

வகைத் தெய்வத் தன்மை அஃது உடைமையான் அடுக்கிய உன்னமென்றார்.

‘ வாடா வள்ளி வயவ ரேத்திய
ஓடாக் கழல்நிலை யுளப்பட ஓடா
உடல்வேந் தடுக்கிய உன்ன நிலையும்’

உன்னங் கண்டு கூறினாற் போலப் பூவையை (காயாம்பூ)க் கண்டு நாட்டெல்லை காடாதலின் அக்காட்டிடைச் செல்வோர் கூறுவர்.

‘ மன்னரும்
ஈடெலாந் தாங்கி இகல் அவிந்தார் நீயுநின்
கோடெலா முன்னங் குழை’

“ மன்னவற் பராஅய் முன்னியது முடித்தோர்
உன்னஞ் சிறக்கும் ஒள்வினை நினை”

“ முன்னங் குழையவும் கோடெலா மொய்தளிர்
உன்னம் குழையொலித் தோங்குவாய்”

உன்னமரம் மறவர் தம் அம்பை விடுதலால் பட்டோரது உடல் மூடிய புதிய கற்குவையின் மேல் வைக்கப்படுவதும், அதன் மேல் நல்ல சிறகினையும் வளைந்த வாயினையு முடைய பருந்து இருந்து வருந்துமென்பர் புலவர்.

“ செந்தொடை பிழையா வன்கண் ஆடவர்
அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்
திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந்து உயவும்
உன்ன மரத்தது உன்னருங் கவலை.”

இஃது இரும்பிடர்த் தலையார் பெரும்பெயர்வழுதியை நோக்கிக் கூறியது.

3. தகர மரம்.

இது சுனைநீர்ப் பக்கமுள தென்றும், அதன் குளிர்ந்த நிழலில் கவரி மாவும் பிணையும் தங்கு மென்றுங் கூறுவர் முடமோசியார். இது வடமலைப் பக்கமுள தென்பர்.

“ நரந்தை நறும்புல் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனை பருகி, அயல
தகரத் தண்ணிழல் பிணையொடு வதியும்
வடதிசை யதுவே வான்தோய் இமயம்”

4. தெங்கு, பனை.

தெங்கு அல்லது பனை மரமும் புலவராற் பாராட்டப் பட்டது. "தாளுண்ட நீரைத் தலையாலே தான் தரும்" என்பது புலவர் கூற்று. தேங்காய் விளைந்தபின் பல வகையாக உபயோகப் படுகின்றது. அதனைக் கறி வகைக்கு வழங்குவது மன்றி அதினின்று எண்ணெயும், புத்துருக்கு நெய்யும் எடுக்கின்றனர். இளங்காயிலுள்ள நீர் பானத்திற்குதவும். அதனருமை கோடை காலத்தில் தெரியும். இளநீர் பருகுதலும் வழுக்கையைத் தின்னலும் வேனிற் பருவத்தில் நண்பகலில் வெய்யோன் கொடுமை மிகும் நாளில் வழக்கம். தேங்காயெண்ணெய் யந்திரங்கட்கும் சோப்புச் செய்வதற்கும் உபயோகப்படுத்தப் படுகின்றது, குலைகள் அலங்காரத்திற்கும் உதவும்.

பழமையான துறை முகமாகிய தொண்டியைப் புனைந்துரையும் புலவர் 'குலை யிறைஞ்சிய கோட்டாழை'யுமுள தென்றனர். நுளையர் மகளிர் முந்நீர் பருகுவ ரென்று கூறியதில் இளநீரும் ஒன்றாகும்.

இரும்பனைக் குரும்பை நீரும் பூம் கரும்பின் தீஞ்சாறும்
ஓங்கு மணல்குவுத்தாழைத் தீ நீரோடு உடன்விராஅய்
முந்நீ ருண்டு முந்நீர் பாயும் தாங்கா உறையுள் நல்லூர்
சோழன் நலங்கிள்ளியின் படைவீரர்.

" ஒழிமடல் விறகிற் கழிமீன் சுட்டு
வெம் கள்தொலைச்சியும் அமையார் தெங்கின்
இளநீர் உதிர்க்கும் வளமிகு நன்னாடு
பெற்றன ருவக்கும் நின்படை கொன் மாக்கள்.'

என்று முதுகண்ணன் சாத்தனார் வரைந்துளர்.

உழவரின் சிறார் தெங்கின் பழத்தை வெறுப்பது தந்தையர் பக்கம் புடைக்கத் தின்று நெற்கூடு வைக்கத் தடுமாறுவதைக் கண்டு கூடு அடையும்போது விசைத் தெழுந்து செழிப்பாயுள்ள பனையின் குலையைத் தொடும் விருப்பத்தா லென்பர்.

“ புதுநெல் வெண்சோற்றுக் கண்ணுறையாக
விலாப்புடை மருங்கு விசிப்ப மாந்தி
நீடுகதிர்க் கழனிச் சூடு தடுமாறும்
வன்கை வினைஞர் புன்தலைச் சிறாஅர்
தெங்குபடு வியன் பழம் முனையில் தந்தையர்
குறைக்கண் நெற்போர் ஏறிவிசைத் தெழுந்து
செழுங்கோள் பெண்ணை (பனை)ப் பழந் தொடமுயலும்.’

5. பலா, மூங்கில், ஆசினி.

பலா மரமும் பூவாமலே காய்க்கும் கோளி எனப்படும். மலை நாட்டில் உழவர் முயற்சியின்றி விளைகின்ற நான்கு பொருள்களில் இஃது ஒன்றென்பர். இதன் தீஞ்சுளை தின்னப்படும் ஆண் மந்தி பெண் மந்திக்கு அதனைக் கொடுக்கும். பலாமரம், ஆசினி, மூங்கில் போன்ற மரங்களுடன் மலையி லுண்டாகும் பழத்தின் முதுகில் முள் போன்றிருக்கும்.

“ விசும்புறக் கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி
ஆசினி கவினிய பலவின் ஆர்வுற்று’

“ முட்புற முதுகனி பெற்ற கடுவன்
துய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்.’

இரவலர் பலாமரத்தின் பெரிய கிளைகளில் தங்களுடைய மத்தளத்தைத் தூக்கி வைப்பார்கள். அதன் கண்ணைப் பலாப் பழமென்று கருதி மந்தி அதனைத் தட்டும். அவ்வொலியைக் கேட்டு அன்னமும் ஒலிக்கும் என்பர் புலவர்.

மன்றப் பலவின் மாச்சினை மந்தி
இரவலர் நாற்றிய விசிகூடு முழவின்
பாடின் றெண்கண் கனி செத்தடிப்பின்
அன்னச் சேவல் மாறெழுந்து ஆலும்.

குறத்திகள் மூங்கில் குழாய்களி லடைக்கப் பெற்ற முதிர்ந்த மதுவை யுண்டு மகிழ்ந்து குரவைக் கூத்தாடும் தீஞ்சுளைப் பலா மர முடைய பெரிய மலைக்கு அரசன் ஆயெனும் அண்டிரன்.

‘ தீஞ்சுளைப் பலவின் மாமலைக் கிழவன் ஆ அயண்டிரன்’

நாஞ்சில் வள்ளுவனைப் பாடிய கருவூர் கதப்பிள்ளை வள்ளுவன் இத்தகைய னென்று கூறுகின்றனர்.

> 'நீஞ்சுளைப் பலவின் நாஞ்சிற் பொருநன்
> துப்பெதிர்ந் தோர்க்கே யுள்ளாச் சேய்மையன்
> நட்பெதிர்ந் தோர்க்கே அங்கை நண்மையன்'

6. முருக்க மரம்.

இதன் இலை அகன்றதென்றும் இதன் பெரிய மரத்தால் செய்யப்பட்ட தூண மாகிய இலக்கில் பலகோசர் படைக் கலங் கற்பார் மாறுபட் டெறிவா ரென்றும் கூறுவர் புலவர்.

> ' இளம்பல் கோசர் விளங்கு படைக்கன்மார்
> இகலினர் எறிந்த அகலிலை முருக்கின் பெருமரக் கம்பம்'

தொலையாத அக்கம்போல உன் வெற்றியும் வாழ்க என்று பிட்டங்கொற்றனைக் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார் பாடியுளர்.

7. வேங்கை, வேம்பு.

வேங்கை வேறு, வேம்பு வேறு. வெப்புன விளைந்தவேங்கை என்றும் கருங்கால் வேங்கை மலரின் நாளும்பொன்னன்ன வீ(பூ) சுமந்த தென்றும், அதனடியில் குறத்திகள் குரவை யாடுவரென்றும் அதன் பூ கரிய இதழை யுடைய ஒளி சிறந்த தென்றும், பூக்க ளுதிர கோவலர்கள் அதன் தழை செறிந்த கொம்புகளைக் கழிப்ப ரென்றும், (இது போல அறிவுடையாளன் இறக்க மக ளிரும் இழை களைந்தனர்.) அழகுள்ள முற்று மூல வேங்கை வெற்பின் விரிந்த கோங்கின் முளகா போன்றதென்றும், மங் கையின் நுண்பல் நாகிள வேங்கையிற் கதிர்த் தொளி திகழு மென்றும், செந் நெல் போர் கடுங்கண் வேங்கை பழுகண்டார் போலு மென்றும், வேங்கை மார்பன் பாண்டிய னெனவும் புலவர் கூறுவர்.

வேம்பு கரிய கோட்டையுடையது. வேம்பின் ஒளியுள்ள தளிர் உழிஞைக் கொடியால் மாலையாகக் கட்டப்படும். அதனைச்

சூடுவன் வழுதி, கரிய கொப்பை யுடைய வேம்பு மாரும் போந் தையும் மலைந்த சென்னியர். வேம்பு மன்றத்தில் நிற்கும்.

'மன்ற வேம்பின் ஒண் பூ'

—லோகோபகாரி.

சிவலிங்கம்

(திரு. M. V. நெல்லையப்பபிள்ளையவர்கள் பி. ஏ.)

(சஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

15. சிவலிங்கம் இரண்டு பகுதிகளையுடையது. அவை ஆவுடையாள் இலிங்கம் என்பன. ஆவுடையாள் அடியில் பீட மாயிருப்பது. அது சத்தியைக் குறிக்கிறது. இலிங்கம் ஆவுடை யாளுக்கு மேலே இருப்பது. அது சிவத்தினது உண்மைச் சொரூபமாகிய பரவெளியைக் குறிக்கிறது. இந்தப் பரவெளி மூப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்துள்ளது. இது ஞானு காசம் என்றுங் கூறப்படும். இந்தப் பரவெளியைத் தான் தாயு மான சுவாமிகள் "சமயாதீதப் பழம் பொருளைக் காட்டும் வெளி" என்று கூறுகின்ருர். இந்தப் பரவெளி சிதம்பரம் என வும் திரு அம்பலம் எனவும் சிற்றம்பலம் எனவும் கூறப்பெறும். இந்தப் பரவெளியிலே கூத்தப் பிரான்(நடராஜமூர்த்தி) உயிர்கள் உய்யும் பொருட்டு எப்பொழுதும் ஐந்தொழில் நடனஞ் செய் கின்ருன். இந்த நடன தரிசனம் சிதம்பரத்தில் ரகசிய தரி சனம் என்று இப்பொழுது கூறப்படுகிறது. இந்தப் பரவெளி யில் கூத்தப்பிரான் செய்யும் நடனத்திஞலேதான் உலகில் எல்லா உயிர்களும் எல்லா உயிரில்லாப் பொருள்களும் இயங்குகின்றன. அவன் இவ்வாறு உலகை இயக்குகிறதிஞல் இயவுள் என்று பழைய தமிழ் நூல்களிற் கூறப்படுகின்ருன். இந்த நடனத்தா லுண்டாகும் அசைதற் சத்தி உயிர்களுடைய மலத்தைப் பாகம் பண்ணுகின்றது. இலிங்கம் ஆவுடையாளாகிய பீடத்தை ஊடுரு விச் சென்றிருப்பது பரவெளியாகிய நாதம் (சிவசொரூபம்), விந்துவை (சத்தி) ஊடுருவி வியாபித்திருக்கின்றது என்பதை

யும் ஒன்று மற்றொன்றை விட்டுப் பிரியாதுவேறுபாடின்றி (அபின்னமாய்) யிருப்பதையும் உணர்த்துகின்றது. ஆவுடையாளாகிய பீடம் இலிங்கத்தின்கீழ் அடங்கியிருத்தல் சத்தி சிவத்துக்குள்ளே அடங்கி தொழிற் செய்கின்றான் என்பதைக் காட்டுகின்றான். "எத்திறம் நின்றானீசன் அத்திறமவளும் நிற்பள்" என்பது சிவஞான சித்தியார் கூற்று. ஆவுடையாளுக்குக் கீழே எண் கோணமாயும் எண் கோணத்துக்குக்கீழ் நாற்கோணமாயும் சிவலிங்கம் அமைந்திருத்தல் நான்கு திக்குக்களும் எட்டுக் கோணங்களுமாயிருக்கிற எல்லா அண்டங்களும் சிவசத்தியினால் ஆக்கப்படுகின்றன என்பதை உணர்த்துகின்றது. ஆவுடையாளின் மேற்பாகத்தில் வெளியே நீண்டிருக்கும் கோமுகியானது சிவசத்தி உயிர்களுக்குச் செய்யுந் தண்ணளிக் கருணையைக் குறிக்கின்றது.

16. சிவலிங்கத்தினது மேல் பாகம் உருத்திரபாகம்; நடுப்பாகம் விட்டுணுபாகம்; அடிப்பாகம் பிரமபாகம் ஆகும். சிவலிங்கத்தில் ஐந்துகலைகளும் அடங்கியுள்ளன. உருத்திர பாகத்தில் சாந்தியாதீதக்கலையும் விட்டுணுபாகத்தில் சாந்தி கலையும் பிரமபாகத்தில் வித்தியாகலை பிரதிட்டாகலை நிவிர்த்திகலை ஆகிய மூன்று கலைகளும் அடங்கியுள்ளன.

17. சிவலிங்க வடிவம் பிரணவமாயிருக்கும் பிரணவ மந்திரமானது எல்லாத் தோற்றங்களுக்கும் முதலாயுள்ள ஒளியாகும். சிவலிங்க வடிவம் குறிக்கிற சதாசிவ மூர்த்தி எல்லாத் தோற்றங்களுக்கும் மூலகாரணரா யுள்ளவர். பிரணவ உறுப்புக்களாகிய அகரம் இலிங்கத்தினது கண்டம் என்றும் உகரம் இலிங்கத்திலுள்ள வட்டம் என்றும் மகாரம் விந்துநாதம் என்றும் திருமந்திரம் கூறுகின்றது.

1. இலிங்க நற்பீட மிசையு மோங்காரம்
இலிங்க நற்கண்டம் நிறையு மகாரம்
இலிங்கத் துள்வட்ட நிறையு முகாரம்
இலிங்க மகார நிறைவிந்து நாதமே.

2. விந்துவு நாதமு மேவு மிலிங்கமாம்
விந்துவதே பீடம் நாத மிலிங்கமாம்

அந்த இரண்டையு மாதார தெய்வமாய்
வந்த கருவைந்துஞ் செய்யு மவையைந்தே.

18. நாம் வாழும் இவ்வுலகமே சிவலிங்கம் காட்டுகிற சத்திசிவம் நிறைந்துள்ள தன்மையை உடையது. சத்திசிவம் விளையாட்டினாலே (activity) தான் இவ்வுலகம் நடைபெறுகின்றது. சத்திசிவத் தன்மையைத் தான் மேற்கு நாட்டுத் தூல உலக இயற்கை ஆராய்ச்சியாளர்கள் matter, energy என்றும் அவ்விரண்டும் ஒன்றை யொன்றும் பிரியாதிருந்து தொழிற்பாடு செய்தலினாலே தான் உலகம் நடைபெறுகின்றது என்றும் தூல உலகத்திலே காணப்படுகின்ற சத்தி வேறு பாடுகளெல்லாம் ஒரே சத்தியினது தொழில் வேறு பாட்டு வகைகள் என்றும் தூல உலகினது இயற்கையைக் கூறுகின்றார்கள். சிவஞான சித்தியார்,

"சத்தியுஞ் சிவனுமாய தன்மை இவ்வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா வாணும் பெண்ணு மூயர்குண குணியுமாகி
வைத்தன னவளால் வந்த வாக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையு மறியார் பீட லிங்கத்தி னியல்பு மோரார்

என்ற பாடலே சத்தி சிவமாய தன்மையே பீட லிங்கத்தின் இயல்பு ஆகும் என்று கூறுகின்றது.

19. சிவலிங்க வடிவம் கடவுளது வழிபாட்டிற்கு ஏற்ற வடிவமாகும். ஒருவன் சிவலிங்கத்தில் கடவுளை வழிபடும் பொழுது மேலே கூறியவாறு அவ்வடிவப் பகுதிகள் விளக்குகிற உண்மைகளை மனதிலே சிந்தித்து வழிபடுதல் வேண்டும். உண்மைகளை நினைத்துஞ் சிந்தியாதுஞ் செய்யும் வழிபாடு பயனுடையதாகாது. கடவுள் வழிபாட்டைப் பற்றித் தவறான கருத்துக்கள் இக்காலத்துப் பத்திரிகைகளில் எழுதப்படுகின்றன. வழிபாடெல்லாம் வழிபாடுசெய்யும் உயிர்கள் பயன் அடைதற்காகவன்றி கடவுளுக்காகச் சிறிதுமில்லை. கடவுளது பண்பையும் அப்பண்பை உயிர்களிடத்தில் அவன் காட்டும் முறையையும் முதலான உண்மைகளையும் உயிர்கள் அறிந்து வழிபட்டாலொழிய உயிர்கள் தங்களை அநாதியே அடைந்துள்ள மலங்களி

னின்று நீங்கி அவனைச் சார்ந்து அவனிடத்துள்ள நிறை பண்பு களை அடைந்து பேரின்பம் பெறுதல் முடியாது. ஒருவன் தன்னினு முயர்ந்த அறிவுடைய மற்றொருவனுடைய உயர்தரப் பண்புகளை அடைதல் வேண்டுமானால் அவன் அவ்வுயர்ந்தா ரோடும் நீண்டகாலம் பழகி அப்பண்புகளை அறிதல் வேண்டும் என்பது உலகத்திற் கண்கூடான அநுபவம்.

20. கடவுள் உலகில் எல்லாப் பொருள்களிலும் அணு வுக்கு அணுவாய் விளங்குகின்றானே அவனை உயிர்கள் அப் பொருள்களில் வழிபடுதல் கூடாதா? கோயிலில் வேறே சிவ லிங்கமாய் குறி அமைத்து அதில் ஏன் அவர்கள் வழிபடல் வேண்டும் எனின் உலகில் விளங்கும் எல்லாப் பொருள்களுக்கும் தனித்தனி பெயர்களிருக்கின்றன. அப்பொருள்களை ஒருவன் கண்டபொழுது அப்பொருள்களது எண்ண முண்டாவதன்றி கடவுள் என்ற எண்ணம் உண்டாதலில்லை. பொதுவான உணர்ச்சி யுடையார்க்கும் பார்த்த மாத்திரத்தே கடவுள் என்ற எண்ணம் உண்டாதற்குக் கோயிலும் கோயிலிலுள்ள குறிகளும் அமைக்கப் பட்டிருக்கின்றன. மேலும் கோயிலிலுள்ள உருவங்களில் கடவு ளுடைய பண்புகளை உணர்த்துதற் கென்றே அமைக்கப்பட் டிருக்கிற குறிகள் உலகிலுள்ள பொருள்களில் காணப்படுவன வில்லை. கோயிலில் ஒரே காலத்தில் பல அன்பர்கள் சேர்ந்து ஒரே கருத்துடன் வழிபடுதலினாலே உண்டாகிற பயன்களில் சிறிதும் வெளிப் பொருள்களை ஒவ்வொருவர் வேறு வேறு காலத்திற் கடவுள் என்ற எண்ணத்துடன் பார்ப்பதனாலும் உண்டாகாது. உலகப் பொருள்களில் மறைந்திருக்கிற கடவுளை எளிதில் நினைத்தற்கு ஏற்ற வழியில் கோயில்களும் கோயில்களில் பல குறிகளும் அடையாளங்களும அமைந்திருந்தாலும மக்கள் கடவுளை மறந்து அவனது அருளுக்கு மாறான தீவினை களைச் செய்கிறார்களே, இந்த அருட் குறிகளில்லாத பொழுது அவர்களது மனம் கடவுளிடத்து எவ்வாறு செல்லும்? இக்கருத் துப் பற்றியே திருநாவுக்கரசு சுவாமிகள்,

குறிகளு மடையாளமுங் கோயிலும்
நெறிகளு மவர்நின்றதோர் நேர்மையும்

அறிய வாயிர மாரண மோதிலும்
பொறியிலீர் மனமென் கொல்புகாததே

என்று தேவாரத்திற் கூறியருளினார்.

சிவலிங்கத்தைப்பற்றி எனது சிற்றறிவுக்கு எட்டினவரையும் மேலே எழுதியுள்ளேன். இந்தக் கருத்துக்களில் ஏதாவது தவறான கருத்துக்களிருந்தால் அறிஞர்கள் அவைகளை எடுத்துக் காட்டுவார்களாக; இன்னு மிகுதியான கருத்துக்களையும் அவர்களெடுத்து உரைப்பார்களாக.

காலத்தின் கோலம்

[காழி. சிவ. கண்ணுசாமி B.A.]

இக்காலத்தின் கோலத்தைக் கழறவு மியலுமோ? தத்தம் நிலையறிந்து நிலையினிற்றல் தலையாய சால்பு என்பது மாய்ந்து ஒழிந்தது போலும்! ஒவ்வொருவரும் தாமிருக்கவேண்டிய நிலையிலும் ஒன்றிரண்டுபடி உயர்ந்ததோர் நிலையிலிருப்பதாகவே கருதுகின்றார்கள். இப்பிறழ்ந்த உணர்வு ஏதுவாக ஒவ்வொருவரும் பெரும் பொருளுடைமை குறிக்கும் நிலக்கிழவர், நிதிக்கிழவர் போன்ற பட்டங்களையோ, அன்றி அரசாங்கத்தாரால் அளிக்கப்படும் பொருளற்ற வெறும் பட்டங்களையோ பெற உரிமை படைத்திருக்கின்றனர் என்னும் ஓர் கொள்கை விரைந்து வேரூன்றி வருகிறது. அத்தகைய பட்டங்களை யடைதற்குரிய தகுதியும் வாய்ப்பும் இல்லாதவர்கள்கூட மெய் வருந்தாமல் வாழ்வை எளிதாகவும் பகட்டாகவும் நடத்திச் செல்வதற்கு இக்காலத்தில் பிறப்புரிமை பெற்றிருக்கிறார்கள் என்ற கொள்கையும் நிலவி வருகின்றது. இழிவையும், அழிவையும பயக்கக்கூடிய இப்பாழும் நினைவிற்குப் பெரும்பாலும் அடிப்படையாக இருப்பதாகக் கருதக்கூடியது முன்னேற்றம் என்ற பெயராற் போாரிட்டுப் பெற விழையும் சீர்திருத்தங்களேயாம். இச்சீர்திருத்தங்கள் பெருகப் பெருக நாட்டின் கடனும் உடன் பெருகுகின்றது. கடன் மிகவே வரிகளும் மிகுகின்றன. இக்கடன் பெருக்கமும் வரிப் பெருக்கமுங்கூடி நாட்டில் பொருள் நடப்

மைத் தடைப்படுத்தி விடுகிறது. இத்தடையாகிய பொருள் முடை காலத்தில் எளிதிற் பொருளீட்டுவதே தொழிலா யமைந்துள்ள வட்டிக்குக் கடன் கொடுப்போர்களும், வேண்டுவோர்க்குக் கடன் வாங்கி யளித்துக் கைக்கூலி பெறுவோர்களுமாகிய வகுப்பினரின் தொகை மிகுதியாகிறது. மெய்யுழைப்பின்றியும் பண்டமாற்றும் பாடின்றியும் ஒன்று பத்தாகப் பொருளீட்டும் மறத்துறையாகிய இவ்வழி தொழில் புரிவதால் ஒரு சில நாளிற் பெருஞ் செல்வந்தராவோர் எத்துணையோர்? அன்றி உள்ள ஒரு சிறிதையுமிழந்து பிள்ளை பெண்ணுடன் ஐயம் புகுவோர் எத்துணைபேர்? அறக் கூழ்ச்சாலைக் கூவி யிரந்தோர் அரசோடிருந்தரசாளினும் ஆள்வர் என்றதும் பொய்யாமோ? குடை நிழலிலிருந்து குவைகள் குவித்தோர் நடை மெலிந்து அவ்வூர் துறந்து சென்றனராயின் அவரின் பிற்கால வாழ்வைப் பற்றிக் கருதவும் நினைப்போர் எவருமிலர். ஆனால் பொருள் நனிபெற்று உயர் நிலையடைந்தோர்களோ நாட்டின் முதற்படியில் வைத்தெண்ணப்படும் பெரியார்களின் நண்பர்களாகவோ அன்றி அப்பெரியார்களில் ஒருவராகவோ மாறி விடுகின்றனர். சென்ற திங்களில் அணைப்போரின்றி யிருந்தோரில் மறு திங்களில் பெருஞ் செல்வந்தராகி "அண்ணலே" என்றழைக்கப்பட்ட பலரை யறிந்திலமோ?

இவ்வாறாக அச்சுக்கெட்டு நிலைதடுமாறி யிருந்து வருமோர் நிலையில் விடாமுயற்சியையும், மெய்யுழைப்பையும், சிக்கனத்தையும், பொறுப்பேற்குந் தகைமையையும் யாரிடத்தேனும் எதிர்பார்த்தற் கூடுமோ? அவ்வளவேன்? மெய்வருந்தி வேலை செய்து வயிறு பிழைக்க வேண்டுமென்று எளிதில் முடிவுகட்டுவோர்களு மிருப்பார்களோ? சிறிதேயாயினும் அறத்தாற்றில் ஈட்டப்படுவதே நன்பொருளாகும் என்ற நீதி, நியதி யெல்லாவற்றையும் ஒதுக்கி வைத்து, உட்கார்ந்த நிலையிலேயே, இனிக்கப் பேசியோ அன்றி இடித்துப் பேசியோ பெரும் பொருள் சேர்க்கும் எளிய வழியையன்றோ யாவரும் பின்பற்ற விழைவார்கள்? எனவே உழைப்பு என்றமொழிக்கே பொருளுணர மாட்டாத பல்லாயிரவர் திரிதருவதை இன்றும்

காணலாம். அவர்களில் ஒவ்வொருவரும் தாமும் நாட்டுப்
பெரியார்களில் ஒருவரென்றே கூறிக்கொள்கின்றனர். இஃதிவ்
வாறாக, கல்வியிலும் தகுதியிலும் மேம்பட்ட நந்நாட்டுச் சிறுவர்
கள் வேலையின்றித் திரிந்து பொருளீட்ட விழையும் வீணர்களை
நோக்கித் தாமும் உழைப்பின்றி வாழ நினைப்பதும் இயல்பே
யன்றோ ?

இஃதொரு புறமிருக்க, சென்ற பெரும்போர் ஏதுவாக,
இவ்வெறும் பட்டதாரிகளின் தொகையும், குருடன் புதைய
லெடுத்தது போல் உழைப்பின்றிச் செல்வந்தரானவர்களின்
தொகையும் ஒன்று பத்தாகப் பெருகிவிட்டது. எத்துணை
"அண்ணல்கள்"! எத்துணை "அம்மைகள்"! சிறு முதல் வைத்
துப் பண்டங்கள் விற்றுவந்த பலர் போரின்பின் நாட்டுப்
பெரியார்களில் இடம் பெற்றதைக் கண்ட இளைஞர்கள் அவர்
களைப் போலவே நடந்து கொள்ளக் கருதுகின்றனரே யன்றித்
தத்தம் உண்மைத் தகுதிக் கேற்றவாறு வாழ வெள்குகின்றனர்.

இத் தகுதியில்லாத் தகுதியை நாடும் ஒரு புரைபட்ட நினை
விற்குச் சீர்திருத்தங்களே அடிப்படை யென்பது ஒருவாறு
உண்மையாயினும், அது மக்கள்மாட்டு மெய்யுழைப்பையும்,
ஊக்கத்தையுங் கெடுத்து மடியை வளர்த்து வருவதால் அதை
ஒரு தொத்துநோயென்றே கருதி விலக்கற் சால்புடைத்து.
நாட்டிலுள்ள எல்லோருமே பட்டங்களைப் பெற்றுச் சிவிகை
யூர்ந்து செல்ல முயன்றால் அச்சிவிகை பொறுத்துச் செல்வோர்
கள் வேண்டாவா ? மேலும் நாட்டு மக்களிற் பெரும் பகுதியினர்
உழைத்தாலன்றி உணவு பெறமுடியாத பெற்றியரன்றோ? அறத்
தாற்றி லீட்டப்படுவதே நன்பொருளெனக் கருதி அவ்வழி
பொய்யுங்களவும் புனைசுருட்டுந் தவிர்ந்து பொருளீட்டி நாணயத்
திற்கும், நேர்மைக்கும் எடுத்துக் காட்டாயிருந்து வந்த இந்நாட்
டில், எக்காலத்தும் ஆகுல நீரவான வீண் பகட்டுகளை வெறுத்
தொதுக்கி உள்ளீடமைந்த மெய்ப்பொருளையே பெரிதெனப்
போற்றி வந்த இந்நாட்டில், இக்காலத்துள்ள இளைஞர்கள் பெரும்
பாலார் தாமும் "பெருந்தகை"கள் போலப் பிறங்க வேண்டு
மென்ற ஒரு புரைபட்ட உணர்வால் அரைப்பட்டினி கிடந்து

வருகிறார்களென்றே கூறலாம். இவ்வாறு அரைப் பட்டினி கிடப்பது தானும் மெய்வருந்தி உழைக்கமாட்டாமை யானன்று, மற்றெதனாலோ வெனின் மெய்யுழைப்பைச் சிறுமையாகக் கருதும் தருக்கெனப்படும் ஒரு பொய்ப் பெருமையினாலே தான். இத் தருக்கினாலெய்த விருக்குங் கேட்டை நினைப்பின் அம்மம்ம நெஞ்சு நடுங்குகிறது! இளைஞர்கள் பெற்றோர்க்கு எய்ப்பினில் வைப்பா யிருப்பதுபோக மக்களுட் பதடியாய்மாற முயல்கின்றனர். இதுவுங் காலத்தின் கோலமே!

புகழேந்தி-செந்தமிழ் நாடகம்.

(இதன் உரிமை யாக்கியோற் குரியது)

(திரு. அ. நடராஜ பிள்ளையவர்கள்)

(சிலம்பு-எ, ௬௩௯-வது பக்கத் தொடர்ச்சி)

மூன்றும் அங்கம்—முதற்காட்சி.

இடம்—சோழநாட்டுச் சிறைச்சாலைக்குப் பக்கத்தெரு.

நடர்—குலோத்துங்கன், ஒட்டக்கூத்தர், கம்பர், புகழேந்தி, ஆறுமுக வேளான் முதலிய மாணவர்கள், மந்திரி, பிரதானி யாழ்ப்பாணர் முதலியோர்.

காலம்—காலை.

(புகழேந்தியும் மாணவர்களும் சிறைச்சாலை மேற்றளத்தினின்றும் வேடிக்கை பார்க்க.)

(நிலைமண்டில வாசிரியப்பா)

புகழேந்தி:—(மாணவர்களை நோக்கி)

அன்ன மாவி னன்னிலை கைக்கொள்
மாணவ மதித்திறம் வாய்ந்தநற் புலவீர்!
காணவே யெளிதாய்க் கவினுறத் தோன்றுமித்

தெருவழி நோக்குமின் ! தேமா விலையொடு
வாழைநற் கமுகின் வாங்கிய குலையும்
செவ்விள நீரும், திகழ்கடிப் பகையும்
தூக்கிய தோரண வாயிலும், பூரண
கும்பமும், பாலிகை கொண்டநல் லெழிலும்,
கம்பமா ரெழிலும், கவினுறு மைந்தர்
சிந்தையின் மகிழ்ச்சியைத் தேக்கிடு முகமும்,
சந்தமார் மடந்தையர் தவளநன் னகையும்,
மாநில மக்கள் வாழ்க்கைக் குயிராம்
மேனில மன்னன் விடுத்தநற் றுணையெனு
நானிலக் காவலன் நற்பெருந் தெய்வந்
தமக்கெனக் கொண்ட தணிவிலா வரச
வன்பினை வானக மகன்றநன் மதியென
இன்புற விளக்கு மெழிலினை யுணர்மின்.

பெருமாள் பிள்ளை:—

கற்றோர் மணியே ! கவின்குலோத் துங்க
நற்றவ வள்ளல், நாட்பல விரவியின்
றோற்ற மின்றித் துலங்குநன் மதியும்
ஆற்றவுஞ் செறிந்த வழிபெரு முகிலான்
மறைந்திட மிகுபனி வாடையன் நோய்கள்
அடைந்திட வவதிபல் லடைந்திடு மக்களை
நிகர்த்தவிவ் வுறையூர் நெடுநகர் மக்களின்
அகத்தினிற் பருதியா யமர்ந்துநற் காட்சி
கொடுக்குமிவ் வேளையிக் குதூகல மாட்சி.
யடுப்பது தகவே.

(ஒட்டக் கூத்தர் முதலிய மந்திரி பிரதானிகள் குதிரை மீதேறிச் சூழ்ந்து வரக் குலோத்துங்கன் யானை மீது பவனிவர)

அங்கணஞ்சாரி:— அஃதோ ! காண்மின் !

உதயமா கிரியிடை யுதித்ததோர் கதிரென

மதமா மிசையே வதிதரு துங்கன்
பச்சைப் புரவிசூழ் பவனியின் சிறப்பை.

(குறள் வெண் செந்துறை)

யாழ்ப்பாணர்:—

கார்மா மிசையே தோன்றிநிற் கவிஞர்பருதி தனைநிகர்த்துப்
போர்மா வயங்கக் கைப்பாவிற் பொலியுந் துங்கன் சிறந்திடவே

2. திகிரி யெடுதது வான்புக்குச் செழித்த கற்ப தருவினொடு
மகிமே சிறக்க சாதமெனும் வல்லி கொணர்ந்த கண்ணனையே.

3. நிகர்த்துத் தென்று டேபுகுந்து நிகரில் கற்ப வல்லியெனும்
அகத்தைக் கொணர்ந்த பெருவாழ்வேஅழகாய்வாழிவாழியவே

4. மூந்நா டதனிற் சிறந்திடுநல் மூளரிப் பொய்கை நிறைபதியாம்
நன்னாட் டதிபா! நாயகமே! நாளும்வாழி வாழியவே.

5. சோழ வளமா நாடதுவே சோறுடைத் தென்று துதிபுலவர்
வாழும் பெருமா நாட்டிறையே! வாழிநாளும் வாழியவே.

ஆறுமுகவேளான்:—

ஆ! கா! அரசனு மிதோவரு கணைந்தனன்.
மாகா திபர்நிலை வாய்த்தநாஞ் செவ்விதே
மேற்றளத் தமர்ந்து வீரனின் முகத்தருள்
காற்றது வீசக் காணுநம் பெருமை
அமரர் விண்ணகத் தமர்ந்தும் பொருந்தார்.

(குலோத்துங்கன் பவனியொடு சிறைச்சாலைக்குப் பக்கத்தில் வர)

வெள்ளையனுசாரி:—

பொருந்தார் பொருந்தார் பொருநதவே பொருந்தார்
மருந்தினை யனையநம் மன்னனும் நெருங்கினன்
காண்மின் முகத்தின் களையினை, நிறைமதி
நாண்மீன் யாவும் நலனுறச் சேர்ப்பினும்
ஒவ்வா திந்த வொளியினைச் சிறிதும்.

புகழேந்தியும், மாணவர்களும்:—(குலோத்துங்கனை நோக்கி).

வாழி! குலோத்துங்க வள்ளால்! வாழி!
யூழிக் காலமிவ் வொண்மகிழ் சிறந்தே.

குலோத்துங்கன்:—(ஒட்டக்கூத்தரை நோக்கி)

முத்தமிழ் மதம்பொழி மத்தகக் களிறே!
இத்தலத் திருக்குமிவ் வரும்பெரும் பெரியார்
வெண்பா வரிப்புலி வேங்கையே யன்றோ?

ஒட்டக்கூத்தர்:—

கண்பா னல்கள்சூழ் கவின்மார் புடையாய்!
வேங்கை வரிப்புலி யானே அவன்கான்
பாங்கர்வாழ் புல்வாய்ப் பான்மைய னவன்.

(கலித்துறை)

மானிற்கு மோவிந்த வாளரி வேங்கைமுன்? வற்றிச் செத்த
கானிற்கு மோவிவ் வெரியுந் தணன்முன்? கனைகடலின்
மீனிற்கு மோவிந்த வெங்கட் சுறாமுனம்? வீசுபனி
தானிற்கு மோவிக் கதிரவன் றோற்றத்திற் றார்மன்னனே?

புகழேந்தி:—புகழா மலையிற் பொருந்திய துங்க
இகழ்வா யிசைத்தவிக் கவிக்குத் தரமாய்ப்
பாடுதல் வேண்டினன். பாடிய பஞ்சைப்
பாட்டினை யொட்டிப் பாடவோ? வெட்டிப்
பாடவோ? செப்பீர்.

குலோத்துங்கன்:— பல்விதப் புலமை சால்.

திருவினை நிகர்ப்போய்! திகழ்ந்தநங் குருவுங்
கருவினின் றெடுத்துக் கவினுற வளர்த்த
தந்தையு மாய மைந்தமை புலவர்
தந்தவாய் மொழியினை வெட்டிடல் தரியேன்;
ஒட்டிட வேண்டினன்: உயர்கவிப் புலவீர்!

புகழேந்தி :—அட்டியில் லாம லங்ஙனம் புரிவல்.

(கலித்துறை)

மானவ னுனந்த வாளரி வேங்கையும், வற்றிச் செத்த
கானவ னவ் வெரியுந் தணலாம், கனைகடலின்
மீனவ னனந்த வெங்கட் சுறவினம், வீசுபனி
தானவ னக் கதிரவன் றேற்றநற் றூர்மன்னனே.

குலோத்துங்கன்:—

ஓ! கோ! இஃதோ வொட்டிடல்! அட்டையி
னெட்டு மிதனை யொவ்வா தாயினும்,
செருமுகத் தெவரே கிளையினைத் தெரிவர்?
செந்தமிழ்ச் செல்வியின் றிருநோக் குடைய
மைந்தரா மிருவிரு மிங்ஙன மாறிட
விழுக்கே யாகும் ;

கம்பர்:— இணையறு தமிழ்க்கே.

(பவனியப்பாற் செல்ல)

கண்ணன்:—(புகழேந்தியை நோக்கி)

அழுக்கினை யகற்றி யைந்தோ டைந்தரை
மாற்றப் பொன்னென வெங்களை மாற்றிய
ஆற்றலிற் பெரியீர்! அறிவிலாக் கூத்தனு
டின்றே நாட்போ ரியக்கத் தொடங்கி
நன்றே வெற்றியு நமதாய்ப் பெற்றோம்.

புகழேந்தி :—ஆயினும், இதுநா மடைவதி லொருதுளி
தாயினும் பெரியதாய்க் கூத்தனைத் தழுவும்
அரசன தன்பினை யுணர்மின். ஆகலின்,
அரசன் முன்பி லணைந்திடு காலம்
நேரிடின் யாவரும் நிமிர்ந்துநம் மொழியால்
வீறிடின் மீள்வம்.

கருப்பனுசாரி:— மெய்யே யெம்முயிர்
போயினும் பின்னிடோம்; புலனுர் மணியே.

(புகழேந்தி முதலோர் மேற்றளத்தை விட்டிறங்க)

(காட்சி முடிகிறது)

நாமகள் தாலாட்டு

[திரு. க. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்]

(48-ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்மா மணிமதுரைச் சொக்கப் பிரானருளும்
கன்மாப் பலகைக் கனகமணித் தொட்டிலிலே 70

கன்மாப் பலகைக் கனகமணித் தொட்டிலிலே
சொன்மாலை யேமெழுவர் சூட்டவளர் தூமணியோ 71

முச்சங்க மென்னும் முழுவயிரத் தொட்டில்நூற்
பிச்ச நிழற்கீழ் வளர்ந்த பிராட்டியரோ 72

சீரா ரகத்தியமாஞ் செம்பவளத் தொட்டிலிலே
பாரார் பரவப் பயின்றருளும் பான்மொழியோ 73

கூருந்தொல் காப்பியமாங் கோமேதத் தொட்டிலிலே
பூரணனார் தாலாட்டக் கண்வளரும் பொற்கொடியோ 74

இச்சைப்பட் டார்க்கினிய ரேனுஞ் சேனாவரையர்
நச்சுபே ராசிரியர் நன்கிருந்து தாலாட்ட 75

நச்சுபே ராசிரியர் நன்கிருந்து தாலாட்ட
இச்சை யுடன்வளர்ந்த வெங்க ளிளம்பிடியோ 76

பாவலர்கள் நாவாகும் பச்சைமணித் தொட்டிலிலே
காவலர்கள் கைகொடுக்கக் கண்வளருங் காரிகையோ. 77

தொன்னூற்பா வாய்ந்து தொடுத்தபசுந் தொட்டிலிலே
நன்னூ னுணுகிடையார் நாதச் சுதியெழுப்ப 78

நன்னூ னுணுகிடையார் நாதச் சுதியெழுப்ப
பின்னூ லணையி லுறங்கும் பிராமியரோ 79

விண்ணே புவியே விரிபுனலே காலேயெங்
கண்ணே மணியேநற் காட்சியே கண்வளராய் 80

தண்டாச் சிறப்புடைய சாவித் திரிமானே
கண்டே சுவையே கனங்குழையே கண்வளராய் 81

திங்கட் குடையான் திருக்கரத்திற் போய்க்குனியாச்
செங்கட் கரும்பூறுந் தேறலே கண்வளராய் 82

உண்டா லினிக்கு முதுபோலா தெஞ்ஞான்றுங்
கண்டா லினிக்குங் கலையமுதே கண்வளராய் 83

மாரிதாள் கூந்தன் மதிவெண் டிலதநுதற்
கூரிய நாசிக் குறுந்தொடியே கண்வளராய் 84

ஞானப் புவிக்குயிராய் நாட்டுங் குடிலையெனும்
மானப் பெருவாவி வட்டவடி வாயிருக்கும் 85

வட்டப் பெருங்குளத்து மாமருங்கு தோறுமங்கே
மட்டுவிரி கஞ்ச மலர்ககாடு பூத்திடுமே 86

மட்டுவிரி கஞ்ச மலர்க்காட்டு மத்தியிலே
வெட்ட வெளியிலொரு வெண்டா மரைமலரும் 87

வேத மரும்பி மிகுமா கமம்விரிந்து
போதக் கலைநாறிப் பொருட்டா திறைத்திடுமே 88

சேரா யிரமுகமுஞ் செந்தே னறிவொழுக்கி
ஓரா யிரமிதழ்சொண் டோங்குமந்த புண்டரிகம் 89

உண்டு பசிபோக்கி யோரே ழிசைச்சுருதி
வண்டு முரல மலர்ந்ததந்த புண்டரிகம் 90

பேச மலர்ந்த பிரசைவெண் டாமரைமேல்
வாச மணிப்பொகுட்டு மந்திரப்பொற் றொட்டிலிலே 91

மின்ன லிடையுடையார் வீழும் மொழியுடையார்
வன்ன வடிவுடையார் மங்கையர்முப் பானொருவர் 92

மங்கையர்முப் பானொருவர் வந்து புடைசூழ்ந்து
செங்கை குவித்துச் சிரம்வணங்கி மெய்காப்ப 93

எண்ணெண் கலையி லெடுத்தவெண் சாமரங்கள்
பண்ணென் மொழியார் பணிந்து பணிமாற 94

கீதக் கடற்பிறந்த கின்னரமங் கையர்கள்
நாதச் சுதிதூக்கி நல்வீணை வாசிக்க 95

நீரியலுஞ் சென்னி நிமலன் மனைப்பிறந்த
வாரிய மங்கை யருகிருந்து தாலாட்ட

ஆரிய மங்கை யருகிருந்து தாலாட்டச்
சீரிய தென்சொற் றிருமகளே கண்வளராய் 97

மானே பிடியே மணிப்புறவே மாமலையிற்
றேனே குறையாத் திரவியமே கண்வளராய் 98

வஞ்சி யிடையாளே வரைமுத் தொடையாளே
கொஞ்சு மொழியாளே கோமகளே கண்வளராய் 99

அன்னக் கொடியாளே யம்பூர வாகனியே
பொன்னுரைத்த மேனிப் புரிகுழலே கண்வளராய் 100

பத்தித் தருவிற் பழுத்ததே மாங்கனியே
சித்தத் தெளிவே சிவக்கொழுந்தே கண்வளராய் 101

முன்ன வினிக்கு முதுபாகே சர்க்கரையே
சின்னஞ் சிறுத்தவிடைத் தேன்குழலே கண்வளராய் 102

மாசு தவிர்த்த மதிவதனஞ் சோதிகுன்ற
ஓசை தழுதழுக்க வுன்னி யழவேண்டாம் 103

துண்டப் பிறைநுதலிற் சோதிமணி முத்தரும்பக்
கண்டம் பொருமக் கலைச்சி யழவேண்டாம் 104

கண்ணாடி யன்ன கதுப்புக் கவின்றொலைய
அண்ணாந்து வெம்பி யரசி யழவேண்டாம் 105

இல்லா ரிளமையென வேரார் முகம்வாடி
அல்லல் பெருக அரசி யழவேண்டாம் 106

காலனை வென்று கலையையரன் கைபடுத்தும்
வேலை நெடுங்கண்கள் வெண்முத்தஞ் சிந்திடுமே 107

வேலை நெடுங்கண்கள் வெண்முத்தஞ் சிந்தியிடப்
பாலைப் பழித்தநிறப் பாவை யழவேண்டாம் 108

நஞ்சை யரன்களத்து நாட்டிக் கருங்குவளை
அஞ்ச மலர்விழிகள் ஆணிமுத்தஞ் சிந்திடுமே 109

அஞ்ச மலர்விழிகள் ஆணிமுத்தஞ் சிந்தியிடச்
செஞ்சொற் பெருமதுரைச் செல்வி யழவேண்டாம் 110

சேலெல்லாந் தென்மதுரைத் தேவிவிழி சென்றடைய
வேலெல்லாம் வென்றகண்கள் வெண்முத்தஞ் சிந்திடுமே 111

வேலெல்லாம் வென்றகண்கள் வெண்முத்தஞ் சிந்திட
நூலெல்லாம் போற்றுமெங்கள் நோன்பே யழவேண்டாம் 112

கோப விதழ்துடிக்க கோற்றேன் கடைதுளிக்கச்
சாப நுதனெரித்துத் தையா லழவேண்டாம் 113

நல்லுயிர் கோற லெதிர்ப்பட்டோன் நெஞ்சம்போல்
மெல்லிதழ்க டாந்துடிப்ப வெம்பி யழவேண்டாம் 114

பூவூ ரிதழ்துடிப்பப் பூங்குமுதப் பொற் பழித்த
வாயூறி மேனி வடிய வழவேண்டாம் 115

கற்புடையார்த் தூற்றுங் கயவன்சீர் போலுனது
பொற்பு நலனழியப் பூவை யழவேண்டாம் 116

முன்வா யரும்பிரண்டு தோன்ற முறுவலித்துப்
பின்வா யுதடு பிதுக்கி யழவேண்டாம் 117

கண்பாதி மூடிக் கடைவா யமுதொழுகப்
பெண்பாவை வெம்பிப் பெரிது மழவேண்டாம் 118

காமன் சிலைபழித்த கட்புருவங் குஞ்சித்துத்
தாம வடஞ்சுவைத்துத் தையா லழவேண்டாம் 119

வாக்குத் தழுதழுக்க மைக்கண் சிவப்பேற
மூக்குநீர் சிந்த முதல்வி யழவேண்டாம் 120

கையின் வளைபுலம்பக் காழ்சதங்கை ஓலமிடச்
செய்ய விரல்சுவைத்துத் தேவி யழவேண்டாம் 121

வாடன் முகத்தயனார் உச்சி மிசையுதைக்கும்
பாடகத் தாள்சுவைத்துப் பாவை யழவேண்டாம் 122

ஆச்சி யழவேண்டாம் அம்மா வழவேண்டாம்
வாய்த்த தமிழகத்து மாதா வழவேண்டாம் 123

பாலாற் குறையோபூம் பஞ்சணையாற் பஞ்சமுண்டோ
கோலமணிப் பூணுடை யிந்நாட் குறைந்தனவோ 124

பாலன் குரல்கேட்டுப் பாற்கடலை யீந்தபிரான்
ஓலஞ் செவிகேட் டுனதுபசி தீரானோ 125

தேம்பி யழுத சிறுவனுக்குப் பால்சுரந்த
காம்பனதோ என்னை கருணை புரியாளோ 126

வானுறங்கும் மேனி வடிவழக னுன்மாமன்
தானுறங்கும் பாற்கடலைத் தந்துபசி தீராளோ 127

பிள்ளைப் பிறையணிந்த பிஞ்ஞகனும் பேறுதவு
புள்ளி மயிலூரும் புலவர் பெருமானும் 128

வாரி குடித்த வரமுனியும் வாலறிவிற்
சீரியரு மோர்மூன்று தேனு வளர்த்தார்கள் 129

போற்றுங் கபாடபுரம் பொன்னுருந் தென்மதுரை
ஏற்ற மணிக்கூட லிம்மூத் தொழுவினிலே 130

ஏற்ற மணிக்கூட லிம்மூத் தொழுவினிலே
பேற்ற மொருமூன்று பேணி வளர்த்தார்கள் 131

வல்ல நாவாலே மதிவயலி லேசெதுக்கிப்
புல்லுநூ லூட்டிமிகப் பேணி வளர்த்தார்கள் 132

செல்வப் பசுமூன்றிற் றேடிக் கறந்தெடுத்த
நல்ல சுவையமுதம் நாங்களுனக் கூட்டிவைப்போம் 133

பத்துடனே எட்டும் பதினெட்டு மாகியநூற்
கொத்துக் கவியமுதங் கோல்வளையே யூட்டிவைப்போம் 134

தொண்டர் புராணத் தொடுகடலி லேயருளாற்
பண்டுகிழான் மொண்டுதவு பாலமுத மூட்டிவைப்போம் 135

கந்தன் கதைகடைந்து கச்சியப்ப னன்றெடுத்துத்
தந்த சுவைத்திரளைத் தையா லருந்திவைப்போம் 136

பேசுபுக ழேந்திகனி வெண்பாப் பிழிந்துகம்பன்
ஆசு கவியி லனேகமுடைத் துத்துருவிக் 137

கூத்த னுலாச்சுவையுங் கூட்டி யதிவீரன்
வார்த்தைச் செழுந்தேனும் வாக்கி வடித்தெடுத்து 138

அல்லமன் காதை யருங்கருப்பஞ் சாறாற்றி
வில்லி தணிகை வியன்கவித்தீம் பாலளவி 139

மெல்லியபா கட்டெடுத்து வேண்டும் படிதருவோம்
கல்லை யுருக்குமொழிக் கன்னி யழவேண்டாம் 140

பொன்னென்னும் மாமி பொறுத்து மனம்புழுங்கிக்
கன்னத் தடித்துவெகு கற்பனைகள் சொன்னாளோ 141

நாசித் துளையாலும் நாக்கு நுனியாலும்
பேசும் பரதேசிப் பெண்ணணங்கு தொட்டாளோ 142

ஆதரித்த மக்களெலா மவ்வணங்குக் காசைகொண்டு
காதரிக்கப் பேசியுனைக் கையுதறி விட்டாரோ 143

சிங்கள மாதியயற் றேயத்துப் பெண்மணிகள்
எங்களுக்கு நீயொப்பென் றில்லாத சொன்னாரோ 144

எல்லாத் திசையு மெறித்த விருஞ்சீர்த்தி
கல்லார் மனம்போலக் கங்குல்லாய்ப் பட்டதுவோ 145

வாயின்மத நூலொருகை வாளொருகை கொண்டுவஞ்சர்
தீயினவை வாரியிட்டுச் சேர வெரித்தனரோ 146

அஞ்சியொளிஞ் சிப்பதுங்கி யங்கங் கடைந்தவற்றைச்
செஞ்சிதலு மண்ணுஞ் சிதைத்தரித்துத் தின்றனவோ 147

செஞ்சிதலு மண்ணுஞ் சிதைத்தரியாச் சில்லணிகள்
வஞ்ச மனமுடையோர் மாட்டு மறைந்தனவோ 148

தக்கசில நூலணிக ளாமுமணி யாருதவார்
வைக்கோன் ஞமலியர்பால் வந்தடைந்து மாண்டனவோ 149

போதனை சாதனையில் போற்றவைத்த சந்நிதிகள்
மாதன சாதனையி லுன்னை மறந்தனரோ 150

வாகான மாபா டியமணியை வண்டுறையார்
ஆகாது கொல்லென் றறையில்வைத்துப் பூட்டினரோ 151

ஆரியை பெற்ற வணங்கென்றுன் னைச்சிலபேர்
காரிய மின்றிக் கழறக் கலங்கினையோ 152

உள்ள பெயரிருக்க வூரார் பெயர்சூட்டிக்
கள்ளத் திருவாண்டுங் கட்டி மொழிந்தாரோ 153

முச்சங்க வாழ்வும் முடிமன்னர் காவலும்போய்
அச்சத்தின் மேலும் அயற்பழியு மாயினவோ 154

ஆதரிப்பார் போனார்க ளாடைபணி யில்லையென்று
மாதரசி நொந்து மனங்கவலை கொள்ளுதியோ 155

உள்ளங் கவலற்க வுண்கண் பனியற்க
கொள்ளும் படிதெரிந்து கூறுவன கேட்டிமோ 156

சீரழிந்து கெட்டுச் சிதைந்து நிரைமாறிப்
பேரழிந்து பூஞ்சு பிடித்து பிடிபாகி 157

முன்பின் முரணி முழுதும் புழுவுழுது
கம்பை நடுமுரிந்து கட்டுவிட் டுச்சிதறி 158

மூலைக்கு மூலை முடங்கிமடங் கிக்கிடந்த
கோலத் திருவா பரணக் குவையெல்லாம் 159

கோலத் திருவா பரணக் குவையெல்லாம்
வாலறிவின் மேலோர் வருந்தி யெடுத்தார்கள் 160

ஊணுந் துயிலு முடற்சுகமுங் கைப்பொருளும்
நாணுங்கை விட்டவர்கள் நாடி யெடுத்தார்கள் 161

நாடி எடுத்து நலனழியா மற்றிருத்தி
நீடுலகி லெங்கும் நிறைய வளித்தார்கள் 162

எங்கு மளித்த வெழிலா யிழைகளெல்லாம்
மங்கா நிதிவழங்கும் வாழ்வே எடுத்தணிவேம் 163

ஆறுபே ரீரேழ் அணிமணிகள் வைத்திழைத்த
பேறுதவு ஞானப் பெருமகுடஞ் சூட்டிவைப்பேம் 164

நாவார வேத்தியிந்த நானிலத்தார் வாழ்வுபெறும்
தேவார முன்றன் திருக்கழுத்திற் பூட்டிவைப்பேம் 165

ஆணிப்பொன் னம்பலவன் கோத்தருளு நானூறு
மாணிக்கக் கோவைமணி மார்பி லணிந்திடுவேம 166

நாவா யிரம்போற்று நன்மந் திரமாலை
மூவா யிரமுமெங்கள் மொய்குழலே யாமணிவேம் 167

தேவ ரிருவர்தருஞ் செஞ்சொற் றிருமணிகள்
தாவில் தொடைமிடைந்து தாயே தரித்திடுவேம் 168

மாகலைதே ருங்கூல வாணிகனார் தந்தமணி
மேகலைவெண் கலைசூழ் மின்மருங்கி லேபுனைவேம் 169

சீரடியார் நல்லா ருரைத்து விலைதெரித்த
சேரமான் தந்த திருச்சிலம்பு காற்கணிவேம் 170

பண்டை வளையா பதியுடனே பாவலர்நா
விண்ட தமிழ்க்காப்பு மென்கரத்துச் சேர்த்திடுவேம் 171

செந்தாது சேர்த்தெடுத்துத் தெய்வப் புலவர்செய்த
அந்தாதி யாழி யணிவிரலுக் கீந்திடுவேம் 172

மங்கல மாலைபுனை மஞ்சரி வஞ்சியுலாத்
துங்க மடன்முதலாச் சொல்லணிகள் சூட்டிவைப்பேம் 173

சூட்டிப் புனைந்து தொடுத்தணிந்து தொன்மையெழில்
காட்டி யணைத்துக் கரத்தேந்திக் காவல்செய்து 174

பாட்டுக்குப் பொன்சொரியும் பாண்டித் துரைத்தேவன்
கூட்டி யியற்றுங் குலவுசங்கத் தொட்டிலிலும் 175

அன்பர்க ளங்கங்கே யமைத்துவைத்த சங்கமெனும்
பொன்பொதியும் தெய்வப் புதியமணித் தொட்டிலிலும் 176

ஆரியமுந் தண்டமிழும் ஆதரிக்கு மன்பர்புரி
சீரியநற் சங்கமெனும் தெய்வமணித் தொட்டிலிலும் 177

சீரியநற் சங்கமெனுந் தெய்வமணித் தொட்டிலிலும்
சூரியமெய்ஞ் ஞானக் குலவிளக்கே யாமேற்றி 178

தீட்டும் பனுவற் றிருப்புகழெ லாங்கூறி
வாட்டந் தவிர மகிழ்ந்துதா லாட்டினமே 179

வாட்டந் தவிர மகிழ்ந்துதா லாட்டவது
கேட்டு மனமகிழ்ந்து கேடி லருள்பூத்துக் 180

கேட்டு மனமகிழ்ந்து கேடி லருள்பூத்துக்
கோட்டந் தவிர்த்துக் குறுமுறுவல் கொண்டருளிச் 181

செஞ்சிலம்பு கொஞ்சுந் திருச்சரணஞ் சென்னியில்வைத்
தஞ்சலஞ்ச லென்றே யணைத்துப் புறந்தடவி 182

வாட்டு மிடியும் மனவருத்த மும்போக்கித்
தீட்டுங் கலைத்தமிழின் செல்வ மெமக்கருளிக் 183

கஞ்சத் தவிசுறும் கலைவாணர் நாவும்போல்
நெஞ்சத் திருந்து நினைத்த வரங்கொடுத்து 184

நெஞ்சத் திருந்து நினைத்த வரங்கொடுத்துச்
செஞ்சொற் பிராட்டி திருவருள்செய் தாண்டனளே 185

தெய்வத் தமிழ்வாழி செந்தமிழின் நூல்வாழி
நல்வித்தை யீந்தருளும் நாமகளும் வாழியரோ 186

ஆனை முகன்வாழி ஆறு முகன்வாழி
ஞான மணிமன்று ணாயகனும் வாழியரோ 187

அம்பிகை வாழி அகத்தியனா ரும்வாழி
நம்புமுச் சங்கத்து நாவலரும் வாழியரோ 188

மூவேந்த ரும்வாழி முச்சங்க மும்வாழி
பாவேய்ந்த பாண்டிப் பழம்பதியும் வாழியரோ 189

சேலாட்டு முண்கட் டிருவாணி மேலுரைத்த
தாலாட்டெஞ் ஞான்றுந் தழைத்தினிது வாழியரோ. 190

நாமகள் தாலாட்டு முற்றும்.

பண்டைத் தமிழ்ச் சொற்கள்

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள், B. A.]

பண்டைத் தமிழ் மக்கள் கடவுளைப்பற்றி என்ன கருத்துக்கள் கொண்டிருந்தார்கள் என்பது அவர்கள் பண்டைக் காலத்தில் வழங்கிவந்த சில செந்தமிழ்ச் சொற்களால் நாம் அறியலாம். அச்சொற்களில் கடவுள் என்பது ஒன்று. கடவுள் என்னும் பண்டைத் தமிழ்ச்சொல் கட என்னும் பகுதி (root) யும் உள் என்னும் தொழிற்பெயர் விகுதியும் சேர்ந்து உண்டான பெயர்ச் சொல். அச்சொல்லினுடைய வேர்ப்பொருள் (root meaning) கடத்தலையுடையவன் அல்லது கடந்தவன் என்பதாம். கடந்தவன் என்றால் எதனை அல்லது எவைகளைக் கடந்தவன் என்ற கேள்வி பிறக்கும். மக்கள் அறிவுடையவர்களாதலின் கடவுளைப் பற்றியுள்ள கருத்துக்களை முதலாவது தங்கள் மனதில் நினைத்துப் பின் அவைகளை வாயினாற் சொல்லுகிறார்கள். கருத்துக்களை மனதில் நினைத்து வாயினாற் சொல்லுதலே மக்களது இயற்கைச் செயலாகும். மனத்தின் செயல் உள்ளே நிகழ்வதாயும், வாயின் செயல் வெளியே நிகழ்வதாயுமுள்ளது ஆதலின் பண்டைத் தமிழர்கள் மனதை உயிரி(ஆன்மாவி)னது உட்கருவியென

றும் வாய் முதலிய ஐம்பொறிகளையும் புறக்கருவிகள் என்றும் கொண்டார்கள். அதிலிருந்து உயிர் (ஆன்மா) தனது உட்கருவியால் செய்கிற செயல் எல்லாம் உயிரினது செயலென்றும் வெளிக்கருவியால் செய்யும் செயல் எல்லாம் உடலினது செயல் என்றும் கொள்ளப்பட்டது. இங்கே செயல் என்பது அறிதலாகும். ஆகவே உயிர் தனது உட்கருவியால் அறியுஞ்செயலை உயிர் அறிவு அல்லது பசு ஞானம் என்றும், வெளிக் கருவியாலறிதலை உடல் அறிவு அல்லது பாச ஞானம் என்றும் அவர்கள் கொண்டார்கள். இவ்வாறு கடவுள் என்ற சொல் உயிர் அறிவையும் (பசு ஞானத்தையும்) உடல் அறிவையும் (பாச ஞானத்தையும்) கடந்தவன் என்னும் பொருளில் வந்தது.

2. உடலானது ஒரு சிறிய உலகம் ஆதலின உடல் அறிவு என்னும் சொல்லில் உலக அறிவும் அடங்கும். அறிவைக் கடந்தவன் என்றால் அறியப்படாதான் என்பது பொருள்,

3. கடவுள் உயிர் அறிவாலும் (பசுஞானத்தாலும்) உடல் அறிவாலும் (பாச ஞானத்தாலும்) அறியப்படுவான் அல்லனெனில் அவன் எதனால் அறியப்படுவான் ? ஒருவாற்றாலும் அறியப்படானோ ? என்ற கேள்விகள் அறிவுடையானொருவன் உள்ளத்திலுண்டாகும் இந்தக் கேள்விகளுக்கு விடைகள் அளித்தற்கு அவர்களது உள்ளத்தில ஓர் ஆராய்ச்சி எழுந்தது.

4. அவ்வாராய்ச்சி அடியில் வருமாறு : கடவுள் உயிர் அறிவாலும் (பசு ஞானத்தாலும்), உலக அறிவாலும் (பாச ஞானத்தாலும்) அறியப்படுவான் அல்லனாயினும் ஒருவாற்றாலும் அறியப்படுவான் அல்லனாயின் அவனால் உயிர்கள் அடையும் பயன் யாது ? பயன் ஒன்றுமில்லாவிடின் அவன் உயிர்களுக்கு எவ்வாறு முதலவன் ஆவான் ? இவ்வுலகில் நாம் கண்ணாற்கண்டும் உய்த்துணர்ந்தும் அறிகிற வியப்பான செயல்களெல்லாம் ஒரு முற்றறிவுடைய முதல்வனாலன்றி நடைபெறுமா ? இன்னோரன்ன கேள்விகளுக்கு விடைகள் அளிக்குங்கால் அவர்கள் கடவுள் ஒருவாற்றான் அறியப்படுவானென்றுதான் முடிவு கட்டவேண்டியதிருக்கிறது.

5. கடவுள் எவ்வாறு அறியப்படுவான் என்னும் கேள்விக்கு விடை அளித்தற்கு உலகில் நிகழும் இயற்கை நிகழ்ச்சி ஒன்றும் அவர்களுக்கு உதவியாயிருந்தது. அது பகலோனும் (சூரியனும்) அவனது ஒளியும் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரியாமலிருக்கிறது. பகலோன் அவனது ஒளியால் பகற்காலத்தில் உலகில் எங்கும் நிறைந்துளன். சிற்றுயிர்மக்கள் பகலோனைத் தங்கள் கண்ணாற் பார்க்கவேண்டுமானால் அவனுடைய ஒளியைக் கொண்டு பார்த்தல் முடியுமேயன்றி விளக்கொளியினாலாவது வேறு எந்த ஒளியாலாவது பார்த்தல் முடியாது. இந்த உவமையை மனதில் வைத்துக்கொண்டு பண்டைத் தமிழர்கள் கடவுளும் பகலோனொளிபோல எங்கணும் நிறைந்திருக்கும் அவனது அருளும் பிரித்தல் முடியாது என்றும் அந்த அருளைத் துணையாகக்கொண்டு நான் கடவுளை அறிதல் வேண்டுமென்றும், அறிந்துகொண்டார்கள் இவ்வாறு அறிந்து கொள்ளுதற்கு இறைவனது அருள்மொழி நூல்களும் துணையாயிருந்தன. இவ்வாறு அவர்கள் அனுமானித்த உண்மையைக் குருவின் உதவி பெற்று இயமம் நியமம் முதலிய அட்டாங்கயோக சாதனைகள் செய்து நேரில் கண்கூடாய் அறிந்தார்கள். இப்படி கடவுளை ஞானக்கண்ணால் அறிகிற அறிவு பதிஞானம், கடவுள் அறிவு, உண்மை உணர்வு, அடிஞானம், அருள் அறிவு, மெய்யுணர்தல் (திருவள்ளுவர்) முதலிய பெயர்களால் கூறப்படும்.

6. மேலே கூறியவாற்றால் கடவுள் என்ற சொற்பொருள் ஆராய்ச்சியால் கடவுள் ஒருவன் உண்டென்றும் அவன் உயிர் அறிவாலும் (பசு ஞானத்தாலும்) உலக அறிவாலும் (பாச ஞானத்தாலும்) அறியப்படுவான் அல்லன் என்றும் அருள் அறிவு (பதிஞானம்) ஒன்றினாலே அவன் அறியப்படுவான் என்றும் நாம் அறியக் கிடந்தமை காண்க. இவ்வாறே கடவுளைக் குறிக்கிற வேறு சில சொற்களையும் ஆராய்வாம்.

'செந்தமிழ்ச் செல்வி' வாழ்த்து

சங்கமெனும் முத்துமணித் தொட்டி லேறித்
　　தனியரசர் மூவர்தருந் தாலாட் டேற்றுப்
பங்கமிலாச் செழும்புலவர் நாவி லோடிப்
　　பாடல்மலி பூம்பொழிலிற் பயின் றுலாவித்
திங்கள்முகத் தோரிதழைப் பூத்து வீங்கித்
　　திரண்டமுலை மங்கையடை செவ்வி வாய்ந்து
செந்தமிழி னின்பமெலாம் மகிழ்நர்க் கூட்டுஞ்
　　செந்தமிழ்நற் செல்விஎன் றுஞ் சிறந்து வாழி.

சந்தனப்பூந் தண்டலைபொற் சயிலமுனி
　　தரவொருமுச் சங்கத் தொட்டில்
வந்தனந்தம் புலவர்திரு மடியிருந்து
　　நாவினடி வைத்து வண்மைச்
சுந்தரப் பொன் மாறன்முதல் மூவேந்த
　　ருலகாண்டு சுடர்பொற் றேற்றச்
செந்தமிழ்நற் செல்வியெனத் திங்கடொறும்
　　வருமரசி சிறந்து வாழி.

ஆறறிவுக் குயிராகி நெஞ்சகத்துத் தூண்டா
　　தணியுமணி விளக்காகி யருநாவுக் கமுதாய்ப்
பேரறிஞர் வாயொழுகு கேள்விமருந் தாகிப்
　　பிறப்புதவு மறியாமைப் பேடகத்தைத் திறக்கும்
சீரியசெங் கோலாகி மேலாகி ஞாலம்
　　சேவனைசெய் தடிபரவ வளருமருஞ் செல்வீ!
ஏரிளமை யினிமைமிகு பழமைவள முடைமை
　　இசைமைமிகு செழுந்தமிழா லினிதிறைந்து வாழி.

க. வேலுப் பிள்ளை,
யாழ்ப்பாணம், ஈவாலியூர்.

திரைகடல் ஓடியும் திரவியந்தேடு

[திரு. இ. மு. சுப்பிரமணியபிள்ளை யவர்கள்.]

நாம் கண் காண உலகில் அடைய விரும்பும் பொருள்கள் மூன்று. அவை அறம், பொருள், இன்பம் என்பன. அறமாவது தன்னலம் கருதாமல் பிறருக்குச் செய்யும் உதவிகளே. பொருளாவது மணிகள், பொன், வெள்ளி, நெல், மண்முதலியன. இன்பமாவது தமது உடம்பு நலம் பெறுவதால் வரும் மகிழ்ச்சி. பிறருக்கு நாம் எந்தவிதமான உதவி செய்ய வேண்டுமானாலும், நமது உடல் இன்பம் பெற வேண்டுமானாலும் பொருள் வேண்டுவது இன்றியமையாதது. பொருள் இல்லாதவர்கள் இவ்வுலகில் எவ்வித அறமும், இன்பமும் அடைய முடியாது. அதனாலேயே பெரியோர்கள் அறம், பொருள, இன்பம் என வரிசைப் படுத்திவைத்தார்கள். ஆன்றோர் 'நடுவணது எய்த இருதலையும் எய்தும்' என்றதும் இதுவே. ஆதலின் ஒவ்வொருவரும் பொருளைத் தேடவேண்டிய முயற்சிகளைக் கைக்கொள்ள வேண்டும்.

அழியாப் பொருளாகப் பெரியோர் கொண்டாடும் கல்வியைக் கற்றற்கும், அக்கல்விததேர்ச்சிக்குக்கருவியாகிய நூல்களை வாங்குவதற்கும், கற்போரது பசி முதலாகிய துன்பங்களை நீக்கி இன்பத்தைதத தந்து அவர்கள் கல்வி கற்பதற்கும் முதன்மையான காரணம் இப்பொருளே. பொருளில்லாமையால் இக்காலத்தில் எத்தனை பிள்ளைகள் படிக்கமுடியாமல் சிறு வகுப்புக்களிலேயே படிப்பை விட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள்? எத்தனை பிள்ளைகள் தங்களுக்குப் பாடமாகவுள்ள நூல்களை வாங்கமுடியாமல் தவிக்கிறார்கள்? எத்தனைபிள்ளைகள் உணவுக்கு வழியில்லாமல் சிறுவயதிலேயே படிப்பை விட்டுவிட்டு வயிற்றுக்கு உணவுதேட முயற்சிகளைத் தேடியலைகின்றார்கள்? இவ்வாறெல்லாம் திண்டாடும் பிள்ளைகளோ அளவற்றவர். இக்காலத்தில் தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைப்பதற்குப் பொருள் படைத்தாரே சில சமயங்களில் தடுமாறும் நிலை ஏற்படுகிறதென்

ருல் மற்றவர்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ ? நாம் பொருளுடையவர்களாக இருந்தால் நமது சுற்றத்தார்கள் நம் மைவந்து நெருங்குவார்கள். உண்மையில் சுற்றத்தாரல்லாதா ரும் ஏதேனும் உறவு கூறிக்கொண்டு நம்மைவந்து நெருங்கு வார்கள். நாம் மிக்க கொடியநோயாகிய அவர்களுடைய பசியை நீக்கி அவர்களுக்குக் களிப்பை உண்டாக்கலாம். நமது பகை வர்கள் நம்மைக்கண்டு அஞ்சுவார்கள். அவர்கள் நம்மோடு ஏன் பகை கொண்டோமென்று வருந்தி நமது நட்பையே விரு ம்புவார்கள். ஈட்டி எட்டின மட்டும்தான் பாயும், பணம் பாதா ளம் வரையிலும் பாயும் அல்லவா ? நாம் உண்மையில் கல்வி யில்லாதவர்களாக இருந்தாலும் பல புலவர்கள் நம்மை வந்து பணிந்து நமக்கு ஒப்பான அறிவாளிகள் ஒருவரும் உலகத்தி லேயே தோன்றியதுமில்லை, தோன்றப்போகிறதுமில்லை என நம்மீது பாமாலைகள் பாடிப் புகழ்வார்கள். அவர்கள் நாம் சூம் பிய தோள்களோடும் பார்வை குறைந்த கண்களோடும் இருந் தாலும் நம்மை மலைபோலப் பருத்த தோளையுடையவனே என்றும் அழகிய சிவந்த தாமரை மலர்களைப்போன்ற கண்களை யுடையவனே என்றும் நம்முன் புகல்வார்கள். புல் தடுக்கினும் போதும் காற்றடித்தாலும் போதும், உடனே கீழே விழுந்து விடக்கூடிய அவ்வளவு வல்லமை படைத்த வீரராக நாம் இருந் தாலும், தற்காலத்தில் ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா முத லிய எல்லா நாடுகளும் இணையற்ற வீரரெனப் புகழும் திருவா ளர் இராமமூர்த்திகூட நமக்கு முன் நிற்கமுடியாதெனு அவர் கள் நம்மைப் போற்றுவார்கள். 'ஈ' என்ற உயிரின் பெயரைச் சொன்னாலும் சினம் கொள்ளும் பெரிய வள்ளலாக நாம் இருக் கிறோம் என்பதை நன்றாக அறிந்தவர்களானாலும் அவர்கள் நம மிடம் வந்து நம்மை நோக்கிப் பாரியென்ற பெரிய வள்ளலாரும் கூடத் தங்களுக்கு நிகராவரோ ? கொடையிற் சிறந்த கர்ண னும் தங்களிடம் தான் கொடைத்தொழில் பயின்றிருக்கவேண் டும் என்று பலபடப் பெருமையாகப் பேசுவார்கள். நாமும் அவர்களுக்கு வேண்டியது கொடுத்து அவர்களை மகிழ்விக்க லாம். அரசரும் அமைச்சரும் அதிகாரிகளும் நம்மை மதித்துத்

தமக்குப் பொருளுதவி வேண்டும்போதெல்லாம் நம்மைவந்தடைவார்கள். நாட்டில் வெள்ளத்தாலாவது பஞ்சத்தாலாவது கேடுகள் விளையும்போது அவைகளால் துன்பமடையும் மக்களுக்கு நாம் பொருள் தந்து ஒருவாறு துன்பத்தைத் துடைக்கலாம். பணமுடையார் சிலர் தீயமனமுடையவர்களாய்க் கொலை முதலியன செய்து செய்து தமது பணவலியால் அக்குற்றங்களிலிருந்து தப்புவதற்கு முயல்வார்கள். அதிகாரிகள் பலரும் பொருளால் மயங்கி உண்மைக்கு மாறாகத் தீர்ப்புகள்கூற முன் வருவார்கள். அத்தீய பணக்காரர்களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டு சில அதிகாரிகள் தமது அறிவை இழந்து ஒரு பாவமும் அறியாத ஏழை மக்களைத் துன்பப்படுத்தத் தொடங்குவார்கள். அவ்வேளைகளில் நாம் நமது பொருளை நல்வழியில் செலவிட எண்ணி உண்மையிலேயே நோக்கமுடையவர்களாய்த் தீயவர்களைத் தண்டனைக்குஉட்படுத்தவும் ஏழைகள் அநியாயமாக அடையும் இடையூறுகளை நீக்கவும் முற்படுவோமேயானால் நமது முயற்சி நல்ல பயனைத்தருவது திண்ணம். பணமதமுடைய தீயார் பதுங்குவர். அதிகாரிகளால் அநியாயச் செயல்கள் விளையா. பணம் பத்தும் செய்யுமல்லவா?

இவ்வளவு பெருமையுடைய பொருளை நல்வழியிலேயே தேடல் வேண்டும். வேளாண்மை, வாணிகம், அரசர் பணி, கல்வி கற்பித்தல் முதலாயினவே அவ்வழிகள். "உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர், பழுதுண்டுவேறோர் பணிக்கு". ஆதலின் வேளாண்மையைப் போல குற்றமற்ற தொழில் வேறொன்றும் இல்லை. ஆசிரியத் தொழிலும் குற்றமற்றதே. கொண்டபடி போலும் விலை பேசி, தமக்கு ஊதியம் ஒரு சிறிது கூடிவரச் செய்யும் வாணிகமே குற்றமற்றதாம். விண் இடிந்து விழுந்தாலும் ஒழுங்கை விட்டு மாறுவதில்லை எனக் கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்யும் திருவுளமுடையார்க்கு அரசர் பணியும் குற்றமுடையதன்றாம். இங்ஙனம் நல்ல வழிகளில் தேடப்பெறும் பொருளே என்றும் நமக்கு நன்மைதருவதாகும்.

களவு, பொய்ச்சான்றுரைத்தல், பொய் வழக்குப்பேசல், கள்ளக்கையெழுத்திடுதல், நம்பிக்கை மோசம் முதலிய தீய வழிகளில் தேடப்படும் பொருள் என்றும் துன்பமே பயக்கும். தீநெறிவந்த பொருள் தன்னை உடையாருக்கு ஆக்கம் போலக் காணப்பட்டாலும் விரைவில் அவர்களை வறியவர்களாக்கி, அவர்களுடைய குடும்பத்தையே நாசமாக்கி, அவர்கள் வாழ்ந்த மாளிகை இடிந்து குட்டிச்சுவராய் பாதாளமூலி, வெள்ளெருக்கு முதலிய முளைத்துப் பாம்புகள் வாழ்விடமாகி விடும்படி செய்யும். ஆதலின் நாம் இத்தகைய தீய வழிகளைக் கனவிலும் கருதலாகாது.

ஏழைகள் வயிற்றுக்கில்லாமல் பொருளுடையாரிடம் சென்று அவர்களுடைய வரவையோ சமயத்தையோ எதிர்பார்த்து அவர்களுடைய தலைவாசலிலே கால் வலிக்க நெடுநேரம் காத்திருக்கிறார்கள். அவர்களைக் கண்ட போது பலவாறு பணிந்து கும்பிட்டுப் பல்லைக்காட்டி இரக்கின்றார்கள்.; அந்நேரத்தில் அவர்கள் உண்மையில் இறந்தவர்களேயாகின்றார்கள். "பணமில்லாதவர் பிணமாம் பான்மை சேர்வர்". பணமில்லாதவர்களை அவர்களுடைய மனைவியும் மக்களும் மதிக்கமாட்டார்கள்: பெற்றதாயாரும் கூட அவர்களை இகழ்ந்து ஏறெடுத்தும்பாரார்.; அவர்களுடைய சொல்லை நண்பரும் கேளார். ஆதலின் ஒவ்வொருவரும் தமது சிறுமை நீங்கிப் பெருமை பெறுவதற்குப் பொருளைத்தேட விடாமுயற்சிகள் பல்லாற்றானும் செய்ய வேண்டும்.

"திரை கடலோடியும் திரவியம் தேடு."

புஷ்பங்களும் அவற்றின் தொழிலும்.

[Prof : P. சுந்தரம்பிள்ளை யவர்கள் M.A]

ஜீவராசிகளுடைய பொதுவான இருபெருங்குணங்களில் முதலாவதான ஆஹார சுவிகார விருத்தி மரவர்க்கத்தில் நடந்தேறும் இயல்பை முன் சஞ்சிகையில் ஒருவாறு கூறி முடித்தோம் அல்லவா. இப்போது அம்மரவர்க்கங்கள், தங்கள் தங்கள் ஜாதிக்கேற்றபடி தங்களுக்குப் பிரதிநிதியாகப் பிற்கிளையுண்டுபண்ணி விடும் ஜீவராசிகளின் இரண்டாம் இலக்கணமாகிய பிரத்தியுத்பாதனம் என்னும் தொழிலை எவ்விதம் நிறைவேற்றுகின்றன என்று சற்றே ஆராய்வோமாக.

2. இத்தன்மையான ஆராய்ச்சிகள் வெளியிலுள்ள நானாவித பதார்த்தங்களைச் சம்பந்தப்பட்டிருப்பதால் நாம் நமது அறைக்குள்ளிருந்து கண்மூடி யோசித்து மனக்கணக்கிட்டுக் கொள்ளுதல் மாத்திரத்தால் உண்மை நிர்ணயிப்பது கூடாததலின், சற்றே வெளியிலிறங்கிப் பற்பலமரங்களிருக்கும் யாதாவதொரு தோட்டத்தில் சென்று சுற்றிப்பார்த்து வருவோமாக. இதோ! இந்தத் தோட்டத்தில் ஒருபுறம் மா, பலா, தென்னை, புன்னை, புளி, கமுகு முதலிய மரங்கள் நெருங்கிவளர்ந்து சோலையாக நிற்பது, பாருங்கள்! சற்றப்புறம் அதோ! நாரகம்*, எலுமிச்சை, மாதுளை, கொய்யா முதலிய செடிகள் நன்றாய் வளர்ந்து பலிதமாய் நிற்கின்றன. அதற்கும் அப்புறம் வாய்க்காலருகில் நன்றாய்ப் பக்குவம் பண்ணின திடரில் கத்தரி, வெண்டை, மிளகாய் முதலிய சிறு செடிகளும் பாகல், புடல், வெள்ளரி, அவரை முதலிய கொடியினங்களும் பல பல கீரைகளும் எவ்வளவு செழிப்பாய் வளர்கின்றன. ஆ! ஆ! இதோ! சுவர்ண வர்ணமாய் விளங்கும் இப்பீர்க்கம் பூப்போல,

> "புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்
> பொன்போற் பீரமொடு புதற்புதன் மலர."

என்னும் நக்கீரதேவர் மொழிக்கு நச்சினார்க்கினியமும் பொருள் விளக்கக் கூடியதாமா? வாய்க்கால் வரம்பில் ஒருவரியாய்

* இதை 'நாரத்தை' என்று சாதாரணமாக வழங்குவார்கள்.

வாழைகள் நிற்பது எவ்வளவு அலங்காரம்! அதற்கு அப்புறம் வயலிலோ நெல் பயிராயிருக்கின்றது. வாய்க்கால் வரம்பு முதல் நாம் உள்ளே பிரவேசித்த தோட்டத்து வாசல் வரையும் தும்பை, துத்தி, அறுகு கோரை என்றிப்படி எண்ணற்ற புற் பூண்டு செடி கொடிகளை மிதித்துக்கொண்டல்லவா நடக்கிறோம். அவைகளை ஒருவரும் கவனிப்பாரில்லை. ஒவ்வொரு வேளை வெட்டியெறிய வேண்டுமென்ற ஓரே ஞாபகத்திற்கு இடம் வந்தால் உண்டேயன்றி அவற்றைத் தீண்டுபவருமில்லை; திரும்பிப் பார்ப்பாருமில்லை! திட்டுவதற்கேனும் அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பெயரிடலாகாதா? “கொல்லையெல்லாம் செடிவளர்ந்து விட்டது. கொடிபடர்ந்து விட்டது. கொத்தடா வெட்டடா!” என்று பொதுப்பெயராற் கூறுவதேயன்றி யாரேனும் இன்ன இன்ன செடிகள் என்றும் இன்ன இன்ன கொடிகள் என்றும் பெயரிட்டழைத்து,—கொண்டாட அல்ல—கொலை புரிய எனும் சொல்வதைக் கேட்டிருக்கிறோமா? பொறுங்கள்! ஈசுர சிருஷ்டியாகிய அனைத்தையும் சமதிருஷ்டியாகப் பார்த்து நமக்கு எட்டிய மட்டும் அவற்றின் விசித்திர விசேஷங்களையறிய நாம் உண்மையாக ஆசைப்படுவோமானால், இப்புற் பூண்டுகளையுஞ் சோதிக்க நமக்குத்தருணம் நேரிடும். தற்காலம் தோட்டத்திற்கு நாம் வந்த காரியத்தை முடித்துக் கொண்டு மேல் ஆலோசிப்போம்.

3. ஏறக்குறைய ௫௰-வருஷத்திற்கு முன் இந்தப் பூமி வெட்ட வெளியாகக் கிடந்த தென்றும் சுரு சுருப்புப் பட்டிச் சுப்பையன் செட்டி அந்தப்பாழ்ம்பூமியை அடைத்துத்திருத்தி இவ்விதம் தோட்டமாக்கிக் கொண்டா னென்றும் நாம் கேட்டிருக்கிறோம்! அவர் இம்மரங்களை யுண்டு பண்ண என்ன செய்தார் ? பல இடங்களிலிருந்தும் விதை காய்களை வரவழைத்துப் பரவிப்பயிராக்கி நட்டு வளர்த்தார் என்பது சரிதான். பருவம் தோறும் அப்படியே கீரை, வெண்டை, புடல் முதலிய விதைகளை யூன்றித்தான் அப்படர் பயிர்களும் உண்டாயிருக்கின்றன. நெல்காலந்தோறும் விதைத்து வயல் பயிரிடுகிறதைக் கண்டிருக்கிறோம். இப்புற் பூண்டுகள் எப்படி உண்டாயின? அவைகளும்

அப்படியே தங்கள் தங்கள் இனத்தின் விதை விழுந்தே யுண்டா யின என்பது, இதோ இத்துத்தியின் உலர்ந்த காயை எடுத்துப் பார்த்தால் அதற்குள் நிறைய விதை யிருப்பதும் சிதறிய விதை களிலிருந்து சிறு சிறு துத்திச்செடிகள் கிளைத்து வருவதும் கண்டால் அறியலாம். இப்புல் தினையின் இனமானதினாலே தினைக்கதிர்போல குலை வாய்த்துச் சிறு சிறு அரிசியினால் நிரம் பியிருப்பது பாருங்கள். இப்படியே பட்டுக்குடையைப் பார்க் கிலும் சிறந்த அழகு கொண்ட இக்காளானும் தோட்டத்து மதி லிலும் இக்குளத்திலும் படர்ந்து கிடக்கும் பலவகைப் பாசியி னங்களும் தங்கள் தங்களுக்குரிய சிறு சிறு விதைகளாலேயே உற்பத்தியாயின என்பது நிராக்ஷேபமாக நிர்ணயிக்கப்பட்டி ருக்கிறது. சிறு வுருவைப் பெரிதாகக் காட்டும் சிற்றுருவிளக்கி என்னும் யந்திரம் நமது கையில் இப்போது இருக்குமாயின் அதனை நிரூபித்தல் எளிதாகக் கூடும். இனி நாம் இவ்வித சோத னைக்குப் புறப்படும்போது ஆவசியம் கொண்டு வரவேண்டிய துண்டு. ஆயினும், நாம் கண்ணாரக் காணக்கூடிய காய், விதை, இவைகளையுடைய புற்பூண்டு செடி கொடி முதலிய யாவும் அந்த அந்த விதைகளிலிருந்தே உற்பத்தியாகின்றன என்பதற்குச் சந்தேகமில்லையே. அம்மட்டேனும் "வித்தில்லாத சம்பிரதா யம் மேலுமில்லை கீழுமில்லை" என்பது பொய்யல்லவே.

4. இனி இவ்விதைகளும் காய்களும் எப்படியுண்டாகின் றன என்று பார்ப்போம். "சரி! சரி! மரம் விதையிலிருந்தும் வந்தது! விதை மரத்திலிருந்தும் வந்தது! மரமுந்தினதா காய் முந்தினதா என்று கேட்க வருகிறீரோ," என்று சந்தேகிக்க வேண்டாம். அவ்விதமான கேள்விகளெல்லாம், தெருவில் நம் மோடு வந்து விட்டால் தீண்டல் படுமென்று கதவையடைத்துக் கொண்டு அறையிலேயே இருக்கிற சாம்பதீக்ஷதரிடம் கேட் டால் அவர் கக்கத்திலிருக்கும் ஸ்காந்தபுராணம் பார்த்தும் கண் மூடிக்கணக்கிட்டும் நமது சந்தேகம் தெளிய உபதேசிக்கினும் உபதேசிப்பார். நாம் இங்கே ஆராயப்புகுந்தது ஆதி சிருட்டி யெப்படி என்றல்ல. இதோ நிற்கும் இந்நாரக (நாரத்தை) மரத்திலிருந்து இதோ தோன்றும் இந்நாரகப்பழம் எவ்விதம்

உண்டாகிறது, என்று அறிந்தால் நமக்குப் போதுமாக இருக்கும். நம் தகுதிக்கேற்றசொற்ப ஆராய்ச்சி தானே நாம் எடுத்துக் கொள்ளலாம.

5. இந்நாரகப் பூவில் ஒன்றைப் பறித்து நன்ருய்க் கவனித்துப் பார்ப்போம். இவ்வித ஆராய்ச்சிக்காகப் பறித்துப் பார்க்கிற புஷ்பங்கள் அப்போது அலருகிறதாக இருக்கவேண்டும். முற்றிலும் அலர்ந்து பொழுது சென்ற மலர்களாக இருந்தால் அவற்றின் உறுப்புக்களில் சில உதிர்ந்தும் அழிந்தும இருக்கக் கூடும். அலராத மொட்டாக இருக்கும் விஷயத்தில் உறுப்புக்கள் முழுதும் பூரணமாகத் தோற்றமாட்டாது. மேலும் நாம் மலர்களை அடர்த்தெடுக்கும் போது எவ்வளவோ கவனித்து அங்கபங்கங்களுக்கு இடமில்லாமல் மெல்லெனக் கிள்ளி எடுத்தலும் அவசியம்.

இதோ இந்நாரக(நாரத்தை) மலர் சரியான பக்குவ முடையதாயும் பத்திரமாக எடுக்கப்பட்டதாயும் இருக்கிறது. இதனைப் பாருங்கள். இதனுள் எத்தனை உறுப்பு இருக்கின்றன? அடியில் இதோ இருப்பது காம்பு. கிள்ளுண்ட இடத்திலிருந்து இன்னும் சிறிது கறைவடிந்து கொண்டிருக்கிறது. இப்படியே எல்லா மலர்களுக்கும் பீடமாக மரக்கொம்பினின்றும் கிளைத்து வரும் காம்பு உண்டல்லவா. அதற்குப் புஷ்பபீடம் அல்லது பூந்தாள் (peduncle) என்று பேர். இக் காம்பு கிண்ணம் போல் விரிந்து பூவின் அடியைச்சுற்றி நிற்பது தெரிகிறதா? கவனித்துப் பார்த்தால் இக்கிண்ணத்தின் மேல் விளிம்பில் நான்கு பாரிசத்திலுமாக ஐந்து பற்போன்ற சிறு நுனிகள் காணப்படும், அந்நுனிகளைப் பிரதானமாகக் கொண்டு நோக்கில் அவை ஐந்தும் ஐந்து பசுமையான இதழ்



நாரக (நாரத்தை) மலர்.
1. புறவிதழ் (Sepals)
2. அகவிதழ் (petals)
3.*மகரந்தவாகினி(pistil)
4.மகரந்தபஞ்சம்(anther)

---

* இந்த 3 இலக்கம் நடுமையத்தில புள்ளிக்கோடு போட்டுக் குறிக்கப்பட்ட பாகத்தைக் குறிக்கிறது. அடுத்த இதழில் வரும் கட்டுரைத் தொடர்ச்சியிலுள்ள படத்தில் இந்த பாகம் தனியாக எடுத்துக் காட்டப் படும். பார்த்துத் தெளிவாய் அறிந்துகொள்க.

களின் சாயை தோற்றுவிக்கலாம். உண்மையில் ஐந்து இதழ்கள் ஒன்றோடொன்று இணைத்து வளையப்பட்டே இவ்விதம் கிண்ணம்போல் இந்நாரகமலரின் அடிப்பீடம் ஆக்கப்பட்டிருக்கிறது. அதோ அந்த அவரைப் பூவில் இவ்வடிப்பீடம் ஐந்து இதழ்களால் ஆக்கப்பட்டதென்பது இன்னும் நன்றாய்த் துலங்குகின்றது. இக்கொய்யாமலரில் அவை முற்றிலும் பிரிந்து ஐந்திதழாக இருப்பதைப் பாருங்கள். இப்படிக் கிண்ணம்போல் பூவைத் தாங்கிக் கொண்டு நிற்கும் இப்பசுமையாகிய ஐந்து இதழ்களுக்கும் புறவிதழ் (Sepals) என்று பேர். ஐந்து இதழும் சேர்ந்த கூட்டத்திற்கு புல்லி (calyx) என்று சொல்வார்கள். இப்பூ அலருமுன் அதனைப் பொதிந்து காத்து நின்றது நாம் இப்போது கூறிய புல்லி என்னும் புறவிதழ்த் தொகுதியேயாம். அலராத மொட்டைப் பார்த்தால் இவை எவ்வளவு பலமாய்ப் பொதிந்து நிற்கிறதென்பது விளங்கும். மலர் உதிர்ந்து காயானதின் பின்பும் அதோ அந்நாரகக் காயின் அடியில் பீடம்போல ஒட்டிக் கொண்டிருப்பது காண்மின். இப்படிக் காயாயும் விடாது ஒட்டியிருக்கும் புறவிதழ்த் தொகுதிக்கு "விள்ளாப்புல்லி" (Persistent calyx) என்று பேர். நல்லது வெயில் ஏறுகிறதற்குள் இச்சோதனையை முடித்துக் கொண்டு வீட்டுக்குப் போகவேண்டும். ஆதலின் இப்போது நாம் பார்வையிட்ட பசிய புறவிதழுக்குள் என்ன என்ன இருக்கின்றன என்று சோதித்தறிவோம். உள்ளே புறவிதழுக்கடுத்த வரியில் இதோ ஐந்து மங்கல் வெண்மையான இதழ்கள் இருக்கின்றன. இவை புறவிதழ்போல் ஒன்றோடொன்று ஒட்டியிருக்கவில்லை. தனித்தனி யிருக்கின்றன. இவைகள் ஒவ்வொன்றுக்கும் ""அகவிதழ்" (petals) என்று பெயர். ஐந்து அகவிதழும் சேர்ந்த தொகுதிக்கு அல்லி" (corolla) என்று கூறுவர்.* இவ்வகவிதழ்களிருக்கும் ஸ்தானத்தைக் கவனியுங்கள். புறவிதழ்கள் இரண்டின் இடையிடையே அல்லவா இவ்வகவிதழ்கள் தோன்றுகின்றன. புறவிதழும் அகவிதழும் நேரே ஒன்றின் உள் ஒன்றாக அல்ல இருப்பது. அப்படி யிருந்தால் மொட்டாயிருக்கும்போது புறவிதழும் அக

* "அல்லியகவிதழ் புல்லி புறவிதழ்" சேந்தனார்

விதழும் ஒரே யிடத்தையே மூடக்கூடியவையாக இருப்பதினால் இடை வெளி தோற்றவும், உள்ளிருக்கும் அங்கங்கள் போது மானபடி பொதியப்படாமலிருக்கவும் நேரிடும். நாம் பூஜைக்குப் புஷ்பம் எடுக்கையில் பத்திரம் பறித்து ஒரு இலை நெடுகவும் ஒரு இலை குறுகவும் இட்டுவிட்டு, அவை இரண்டாலும் பொதியப் படாத இடத்திற்குக் கோணலாக இரண்டிலை பின்னும் எப்படி யிடுகிறோமோ, அப்படியேதான் புறவிதழ் ஐந்தாலும் மூடப் படாத ஸ்தலங்கள் மறையும்படி, புறவிதழ் இரண்டிரண்டிடையில் ஒவ்வொரு அக இதழ் இருந்து உள்ளிருக்கும் உண்மையான மலருறுப்புக்களை நன்றாய்ப் பொதிந்து காப்பாற்றுகின்றது.

6. "ஏது! உண்மையான மலருறுப்புக்கள் இன்னும் உள்ளாகவா இருக்கின்றன? அகவிதழ் புறவிதழ் என்று நாம் பிரித்தறிந்து கொண்டவை யல்லவோ?" எனின்; அப்படியே அகவிதழ் இரண்டும் உண்மையான மலருறுப்புக்கள் அல்ல. இவை யிரண்டு மில்லாத புஷ்பங்கள் அனந்தம். சாதாரணமாய் மரம் நிறைய நிற்கும் மற்ற இலைகளை யொத்த இலைகளே, உள் ளிருக்கும் மிருதுவான அங்கங்களுக்கு இசைய இப்படி மெல் லிய உருவெடுத்து, அகவிதழ் புறவிதழ் எனச் சுற்றி நின்று, உள்ளிருக்கும் பிரதான அங்கங்களைப் பாதுகாத்து வருகின்றன. சதுரங்க சேனுவலயம் சூழ கோட்டை கொத்தளம் கட்டி அவை நடுவே அநேக பிராகாரசமாவரணமான அரண்மனையுள்ளே பட்டவர்த்தினியோடும் சிம்ஹாசன பதியாய் வீற்றிருக்கும் அர சனையறிந்து தெரிசித்துச் சல்லாபிக்க இடம் பெறாத ஏழை குக்கிராம வாசிகள், கோட்டைவாசற் சேவகனைப் பார்த்து வாளும் கையும் கண்டு மன்னவனாக மதித்து வந்தன வழிபாடு செய்யும் மடமைபோலன்றோ, நிறமும் மணமும் கண்டு புறவிதழ் அகவிதழாகிய இப்புஷ்ப காவலாளரை மலர் என்றும் பூ வென் றும் வாழ்த்திப் போற்றுகின்றோம். இனி அம்மதிப்பினை விட்டு, உள்ளிருக்கும் உண்மையான உறுப்புக்கள் எவை யென்று உற் றுப்பார்ப்போமாக. அப்பரிசோதனைக்குச் சற்றும் தடை யில் லாமலிருக்கும்படி ஐந்து புறவிதழ்களையும் மெதுவாக அடர்த்து எடுத்து விடுவோம். பிற்பாடு என்ன என்ன காணப்படுகின்றன?



மகரந்தபஞ்சரங்களும். மகரந்தக்காம்புகளும்.

உருண்டு நீண்ட உட் குழிந்த துரட்டி போன்ற தலைகளோடும் பல சிறு காம்புகள் தோற்றுகின்றன அல்லவா? இக்காம்புகள் இரண்டு மூன்று ஒன்றாக அடியிற் சேர்த்து வளையப்பட்டிருப்பினும் தலைகள் வெவ்வேறாக இருப்பது பார்க்கலாம். இத்துரட்டி போன்ற, உருண்டு நீண்ட குழிந்த தலைகளுக்கு 'மகரந்தபஞ்சரம்' (anther) என்றும், இவற்றைத் தாங்கிக் கொண்டிருக்கும் நூல் போன்ற நுண்ணிய உடம்பிற்கு 'மகரந்தக்காம்பு' (filaments) என்றும் பெயர். சாதாரணமாக இவ்வித மரங்களின் புஷ்பங்களிலுள்ள இக்காம்புகளும் இம் மகரந்த பஞ்சரங்கள் என்னும் தலைகளும் ஐந்தோ, ஐந்தின் பெருக்கங்களாகிய, ௫-௰௫-௨௰-என்ற ஐந்தின் குணன சங்கைகளாகவோ இருப்பது வழக்கம். கவனித்து எண்ணிப் பார்த்தால் தெரியவரும். இதைக்குறித்து இனி யொரு பொழுது ஆலோசிக்க நேரிடும். இப்போது நாம் கண்டுகொண்ட ஒவ்வொரு துரட்டி போன்ற மகரந்த பஞ்சரமாகிய தலை இருபுறமும் உட்குழிந்திருப்பது கண்டோமல்லவா? உண்மையில் இத்தலைப்பின் வலப்புறம் இடப்புறமாக இரண்டு சிறு அறைகள் ஒன்றுபடப் புணர்த்தப்பட்டிருக்கின்றன. அப்படிப் புணர்த்தினதினால் உண்டான பொருத்துத்தான், இங்ஙனம் இருபுறமும் குழியாகத் தோற்றுகின்றது. புஷ்பம் விகசிக்கும் காலத்தில் இப்பொருத்து அடியில் சற்றே விலகுகின்றது. விலகவே யுள்ளிருக்கும் மகரந்தப் பொடி வெளியே சிதறுண்டு போகின்றது. இம்மலர் அலர்ந்த மலராதலால் இதோ நம் கைவிரல் படுமிடமெல்லாம் மஞ்சள் நிறமாக ஒரு தூள் அகப்படுகிறது. பாருங்கள்! காம்பிலும் நாம் பறித்து எறிந்துவிட்ட அகவிதழ்களிலும் மஞ்சள் மஞ்சளாகக் காணப்படுவதும் இதுவே. இத்தூளுக்குத் தான் 'மகரந்தம்' (Pollen) என்று பெயர். கூர்மையாகப் பார்த்தால் இத்தூள் பல ரேணுக்களால் ஆக்கப்பட்டிருக்கிறது விளங்கும். இவ்ரேணுக்கள் ஒவ்வொன்றும் பயறுபோல் உருண்டு திரண்ட வடிவினையுடையதாயிருக்கும். அதற்கு மகரந்தரேணு (Pollen grain) என்று பெயரிடுவோம். இந்த ரேணு ஒவ்

'வொன்றுக்குள்ளும் மூலசத்தையின் அதிவிசித்திர விகாரமான விந்து என்னும் தத்துவம் இருக்கிறது. அதனை மகரந்தவிந்து என்று சொல்லுவார்கள். இதுவே புஷ்பங்கள் காயாக முதிரச் செய்யும் முக்கியதத்துவம். ஆனால் அதன் குண வைபவங்கள் முழுதும் அறிவதற்கு சிற்றொருவிளக்கியின் உதவியின்றி முடியாது. சிற்றுரு விளக்கியோ இப்போது கையில் இல்லையே. இனி வரும்போது கொண்டுவந்து சோதித்து அறிந்துகொள்ளுவோம். இப்பொழுது இனியும் ஏதாவது உறுப்புகள் இம்மலரிடத்திலிருக்கின்றனவோ என்று மேற்பார்வையாகப் பார்த்து முடித்துக்கொள்வோமாக. (தொடரும்.)

—விவேகசிந்தாமணி.

மாயாவதி.

[திரு. எம். பி. எஸ். வேலாயுதம்]

(முன் 63-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இருவரும் சிற்றுண்டிச் சாலைக்குச் சென்று ஆங்கிருந்த இரு நாற்காலிகளி லமர்ந்தார்கள். உடனே இருகிண்ணங்களில் குளிர்ச்சியான பானம் இவர்கள் முன் கொணரப்பட்டது. சொக்கநாதன் மெதுவாய் உறிஞ்சிச் சாப்பிட்டுக் கொண்டு தன்னைச் சுற்றிப்பார்த்துக் கொண்டிருந்தான். பிறிதொரு மேசையின் முன் மூன்று பேர், ஓர் ஆடவனும் இரு பெண்களும் உட்கார்ந்திருந்தார்கள். இருபெண்களும் மிகவும் நாகரீகமாய் உடையுடுத்தி, தக்க நகைகளை யணிந்திருந்தார்கள். கால்களில் பட்டு வைத்துத் தைத்த மிதியடிகளுங் காணப் பட்டன. இருபெண்களும் அழகே உருக்கொண்டு வந்தது போல் காணப்பட்டனர். அதிகமாய் விவரிக்க வேண்டியதில்லை. சொக்கநாதன் கண்கள் அவர்களை நோக்கின.

கார்த்திகேயன்:—"என்ன மிரளமிரள விழித்துக் கொண்டிருக்கிறாய். ஏதாவது இங்கு தெருச்சண்டை இழுக்க உனக்கு நினைப்பா?"

சொக்கநாதன்:—"இவர்கள் மிகவும் பணக்காரர்களா யிருக்க வேண்டும்."

கார்த்திகேயன்:—"அப்படிச் சொல்லிவிட முடியாது. சென்னை வாசியின் நிலைமையை அவன் வீட்டுப் பெண்களுடைய ஆடையினால் மதித்துவிட முடியாது. லட்சாதிபதியின் மனைவியும், நாற்பது ரூபா மாதச் சம்பளம் வாங்கும் சிப்பந்தியின் மனைவியும் இவ்விதமாகத்தான் ஆடம்பரமாய் வருவார்கள். சோற்றுக்கு வழியில்லா விட்டாலும் ஆடையில் ஆடம்பரமாகத்தானிருப்பார்கள். அவர்கள் நம்மையெல்லாம் வறிஞர் என்றே நினைக்கிறார்கள்."

சொக்கநாதன்:—"இடது பக்கமிருக்கும் பெண் மிகவும் அழகாயிருக்கிறாள். அவள் சென்னை வாசியாய்த் தோற்றவில்லையே. அவள் முகத்தைப் பார்த்தால் நம் பக்கத்துப் பெண்ணைப் போலன்றோ விருக்கிறது."

கார்த்திகேயன்:—"அவள் தென்பக்கத்திலிருந்து இங்கு குடியேறிய குடும்பத்தைச் சேர்ந்தவள். அவள் முகச்சாயலைப் பார்த்தால் மதுரை அல்லது நெல்லை வாசி போல் தெரிகிறது."

சொக்கநாதன் முன் வைக்கப்பட்டிருந்ததோ ஒரே ஒரு கிண்ணத் தேயிலைப்பானம். அதனை எவ்வளவு நேரமாகத்தான் அருந்திக் கொண்டிருக்க முடியும்? ஆனால் சொக்கநாதனுக்கு அவ்விடத்தை விட்டுப் போவதற்குச் சற்றும் பிரியமில்லை. "இன்னொரு கிண்ணம்கொண்டுவரச் சொல்வோமா" என்றான் கார்த்திகேயனிடம். கார்த்திகேயனுக்குச் சிரிப்பு வந்து விட்டது. "வேண்டாம். அவர்களும் அதோ புறப்பட்டு விட்டார்கள்" என்றான் சொக்கநாதனைப் பார்த்து. இவர்கள் நோக்கிக் கொண்டிருந்த பெண்ணுடன் வந்திருந்தவர்கள் வெளியில் சென்றுவிட, அவள் மட்டும் இன்னொரு கிண்ணத் தேயிலை கொணரச் சொல்லி உட்கார்ந்திருந்தாள். அவள் தான் நம்" மாயாவதி."

கார்த்திகேயன்: "இதோ நானும் சிறிது வெளியில் சென்று வருகிறேன். நீ இங்கு மயங்கி விடாதே. உன் தாயாரை

நினைந்து கொள். விடுதிகளில் உண வருந்துவதைத் தடுக்கும் தாயார் அன்னிய பெண்களை இச்சிப்பதை விரும்பாள்.

சொக்கநாதன் சிறிது நாணவும், கார்த்திகேயன் வெளியேறி விட்டான். மாயாவதியும் தேயிலைப்பானமருந்தி வெளியில் செல்ல வந்து விட்டாள். மாயாவதி விடுதித் தலைவனுக்குத் தன் பையிலிருந்து ஒரு ரூபா எடுத்துக் கொடுத்தாள். மேசையில் தட்டிப் பார்த்தால் அது செல்லாத ரூபா. மாயாவதிக்கு ஒன்றுந் தோன்றவில்லை. அங்கு மிங்கும் பார்த்துத் திகைத்தாள். என்ன செய்வதென்று விளங்கவில்லை. இவற்றையெல்லாம் கவனித்திருந்தான் நம் சொக்கநாதன். அவளிடம் பேசுவதற்கே சமயம் பார்த்திருந்தான். அவள் இவ்வாறு திகைத்து நிற்கையில் அவளை யணுகி "அம்மா, நான் தங்கட்கு ஏதாவது உதவி செய்ய முடியுமோ? என்னாலியன்றதைச் செய்யத் தயாராயிருக்கிறேன்", என்றான். மாயாவதி சொக்கநாதனை ஏறெடுத்துப் பார்த்துச் சற்றுத்திகைப்புடன்," எனக்கு ஒரு ரூபா தற்சமயம் கொடுத்துதவினால் நலமாயிருக்கும். என்னிடம் இவ்வொரு ரூபாதான் இருக்கிறது. இதுவும் செல்லாததாயிருக்கிறது" என்றாள்.

உடனே சொக்கநாதன் தன் பையிலிருந்து ரூபா ஒன்றெடுத்து மாயாவதியிடம் கொடுக்க அவளும் மிகவும் வந்தனத்துடன் அதனை ஏற்று, விடுதித் தலைவனிடம் கொடுத்து வெளியில் வந்தாள். மாயாவதி "எனக்கு இன்று தாங்கள் ஓர் பேருதவி புரிந்தீர்கள். மிக்க வந்தனம். நாளை இந்நேரத்திற்கு இவ்விடம் வருவீர்களாயின் தங்கள் பணத்தைத் திருப்பியளித்து விடுகிறேன். தங்கட்கு அவகாச மில்லாவிடில், தங்கள் விலாசத்தை யறிவித்தால், ஆங்கு அனுப்பி விடுகிறேன்." என்றாள்.

சொக்கநாதன்; "நான் கட்டாயம் வருகிறேன். நாளை மாலை சரியாய் ஆறு மணிக்கு இங்கிருக்கிறேன்."

மாயாவதி: "தாங்கள் எவ்வூர் வாசியோ".

சொக்கநாதன்; "நானிருப்பது மதுரை".

இதைக் கேட்டுக் கொண்டு மாயாவதி போய்விட்டாள்.

வெளியில் சென்றிருந்த கார்த்திகேயனும் அச்சமயம் அங்கு வந்துசேர்ந்தான். "ஏது. வந்ததற்குள்புதிய தொடர்புகள் சேகரித்து விட்டாய் போலிருக்கிறதே. நான் இவ்விடம் எத்தனையோ ஆண்டுகளாயிருந்து வருகிறேன். ஆனால் என்னை யாரும் பார்க்கக்கூட மாட்டேனென்கிறார்கள். நீயோ வெளில் முதல் நாளிலேயே—" என்று கார்த்திகேயன் சொல்லி முடிப்பதற்குள், சொக்கநாதன். "ஆம், ஆம் நான் அதிர்ஷ்டசாலிதான். நாம் போகலாம் வா" என்று தன நண்பனை வீட்டுக்குப் போகக் கூப்பிட்டாள்.

கார்த்திகேயன்: "நல்லது போகலாம், ஆனால் ஆழந் தெரியாமல் காலை விட்டு விடாதே. இவ்வூர் வாசிகளை நீ இன்னும் அறிந்து கொள்ளவில்லை."

சொக்கநாதன்: "நீயும் என்ன கர்நாடகமாயிருக்கிறாய். ஏதோ ஒரு பெண்ணுடன் பேசினதினால் என்னென்னமோ நேரிடு மென்று அளக்க வாரம்பித்து விட்டாயே ?"

கார்த்திகேயன் "அணுவிலிருந்துதான் அண்டம். உனக்கு எச்சரிக்கை செய்யவேண்டியது என் கடமை. என பேச்சைக் கேட்பதும், அல்லது தள்ளி விடுவதும் உன் பொறுப்பு".

சொக்கநாதனுக்கு இவ்வறிவுரைகளெல்லாம் ஏற்க வில்லை. அவன் எண்ண மெல்லாம் நாளை அப்பெண்ணைச் சந்திப்பதிலேயே குடிகொண்டிருந்தது. இரு நண்பர்களும் நடந்தே வீடு போய்ச் சென்று இரவைக் கழித்தார்கள்.

பொழுது விடிந்தது. எப்போது மாலைப் போழ்து வருமென்றே சொக்கநாதன் எதிர்பார்த்திருந்தான். தனக்குள்ளேயே, "நாம் மட்டும் தனியே தான் செல்லவேண்டும். கார்த்திகேயன் உடன் வருவது நமக்கு இடைஞ்சலாய் முடியும். இருந்தாலும் இதை எப்படி அவனிடம் சொல்வது" என்று சஞ்சலப் பட்டுக் கொண்டிருக்கையில், மாலை நாலு மணியாய் விட்டது. கார்த்திகேயன் தன் நண்பனைப் பார்த்து, "நானும் உன்னுடன் வர எண்ணியிருந்தேன். நீ அதனை விரும்பா விடினும், நீ என் விருந்தாளியாயிருப்பதால், உன்னைப் பாதுகாக்க வேண்டியது

என் பொறுப்பு. என் காரியாலயத் தலைவர் என்னை உடனே வரச் சொல்லியிருக்கிறபடியால் நான் உன்னுடன் வருவதற்கில்லை. ஆகவே உனக்கு வழி திறந்திருக்கிறது. மிகவும் எச்சரிக்கையாயிரு. அவ்விடத்திலேயே அவளிடம் பேசிக் கொண்டிரு. ஆனால் அவளுடன் வெறெங்கும் போய்விடாதே" என்று சொன்னான்.

சொக்கநாதனுக்குப் பெரிய தடை யொழிந்தாற் போலாயிற்று. தன் நண்பன் வெளியே சென்றதும், தன்னை அலங்கரிக்க வாரம்பித்தான். தன்னை அழகுபெற அலங்கரித்துக் கொண்டு, ஓர் வாடகை ரிக்ஷாவில் ஏறி, முன் குறிப்பிட்ட விடுதியை யடைந்தான். மணி ஐந்தேமுக்கால் தானாயிற்று. கால் மணி நேரமும், ஒரு நாளாகவே அவனுக்குத் தோன்றியது. சரியாய் ஆறு மணிக்கெல்லாம் பிறிதொரு ரிக்ஷாவில் நம் மாயாவதி வந்திறங்கினாள். நேற்று அணிந்திருந்த ஆடை போலல்லாமல் இன்று தென்னாட்டுப் பெண்கள் போன்றே உடுத்திருந்தாள்.

மாயாவதி வண்டிக்காரனுக்கு வாடகையைக் கொடுத்து விட்டு, சொக்கநாதனை யணுகி, "தாங்கள் வெகு நேரமாய்க் காத்துக் கொண்டிருக்கிறீர்களோ" என்றாள்.

சொக்கநாதன், "இல்லை, இல்லை. நானும் சற்று முன்பு தான் வந்தேன், ஆனால் என்ன புதுமாதிரியாய் உடையணிந்திருக்கிறாயே. நான் முதலில் உன்னை அறிந்து கொள்ளமுடியவேயில்லை."

முதலில் ஒருவருக்கொருவர் சந்திக்கிறபோது கேட்கிற கேள்வி இதுவல்லவாயினும், மாயாவதி, "நாம் உள்ளே போவோம். அப்புறம் தங்களுக்கு விடையளிக்கிறேன்" என்று சொல்ல விடுதிக்குள் இருவருஞ் சென்றார்கள்.

சொக்கநாதன், "நீ இருப்பது இங்கிருந்து வெகுதூரமோ"?

மாயாவதி, "இல்லை, பக்கத்தில் தான், ஆனால் நான் கல்விச் சாலை யொன்றில் ஆசிரியையாயிருப்பதால், அஃது முடிகிற

வரை வேறெங்கும் செல்ல முடியாது. வீட்டுக்குப்போய் விட்டு வந்தேன்.''

சொக்கநாதன், "நீ ஆடையை மாற்றியிருப்பதற்குக் காரணஞ் சொல்லவில்லையே?''

மாயாவ : "இது தான் எங்கள் ஊர் வழக்கம். நானும் மதுரைவாசி தான். இவ்வூரிலிருப்பதால், இவ்வூர்ப்பழக்க வழக்கத்தை யனுசரிக்கிறோம். இன்று நான் மதுரை வாசியான தங்களைச் சந்திக்க வந்துள்ளதால் நம் வழக்கப்படி உடுத்திவந்தேன்.''

சொக்கநாதன்: "நீ மதுரைக்கு வந்ததேயில்லையா?

மாயாவதி: "இல்லை. எனக்கு மதுரையே தெரியாது. என் தந்தை இவ்விடம் வந்து என் அன்னையை இவ்விடமே மணந்து கொண்டார். நான் குழந்தையாயிருக்கும் போது, மதுரைக்குச்சென்ற விடத்தில் இறந்து விட்டார்.''

சொக்கநாதன்: "ஆனல் அவருடைய உற்றார்கள் உன்னைப் பற்றி விசாரிக்கவோ, அல்லது உன்னை வந்து கூட்டிக்கொண்டு போகவோ இல்லையா?''

மாயாவதி :—"ஐய! என் தந்தை சென்னை வந்து பல்லாண்டுகளாயிற்று. அவர் மதுரையி லிருக்குங்கால் அவருக்கு மணவினை நடந்ததாகவும், அம்மனைவி பின் இறந்து விட்டதாகவும் கேள்வி. இங்கு வந்த பின்னர் இவ்வூர்ப் பெண்ணாகிய என் தாயாரை என் தந்தை மணந்து கொண்டார். அவர் அவ்வாறு செய்து கொண்ட காரணத்தால், மதுரையிலுள்ள அவருடைய உற்றார்கள் எங்களை யணுகுவதில்லை.''

சொக்கநாதன் :—"இங்கு எப்படி நீங்கள் காலங் கழிக்கிறீர்கள்''?

மாயாவதி :—"என் தாயாருக்குச் சிறிது செல்வம் உண்டு. என்னை நன்கு படிக்கவைத்து விட்டதினல் நானும் கல்விச்சாலையொன்றில் ஆசிரியையா யிருந்து பொருள் ஈட்டுகிறேன். இவற்றை வைத்துக்கொண்டு நாங்கள் காலங் கழிக்கிறோம்.''

சொக்கநாதன் :—"இவ்விடம் மதுரை வாசிகள் பலர் இருக்கிறார்களே அவர்களில் யாரை யாகிலும் நீ அறியாயோ?''

மாயாவதி :—“ என் தாயாரை, மதுரையிலுள்ள என் தந்தையின் உற்றார்கள் சரியாய் நடத்தாதலினால், அவளுக்கு மதுரை வாசிகளென்றால் வெறுப்பு. ஆகவே நான் அவர்களிடம் பழகுவதில்லை.”

சொக்கநாதன் :—ஆனால் எப்படி என்னுடன் பழக எண்ணங் கொண்டாய் ?”

மாயாவதி :—“நாம் சந்தித்துப் பழகவேண்டுமென்பது கடவுள் விருப்பம் போலும்.”

சொக்கநாதனுக்கு அளவிறந்த மகிழ்ச்சி ஏற்பட்டுவிட்டது. “மாயாவதி சொன்னது சரிதானா? கடவுளே இருவரும் சந்திக்க வேண்டுமென்று செய்தனரா? அப்படியானால் ஏன் ?” என்று ஆழ்ந்த சிந்தனையில் இருந்துவிட்டான்.

(தொடரும்)

திருபனந்தாள் மடாதிபதி திருவடி நீழலடைந்தனர்

தமிழ் மொழியின் பொருட்டும், திருக்கோயில்களின் பொருட்டும் பெரியதொரு மூலதனம் ஏற்படுத்தி வைத்தவரும், வடமொழி தென்மொழி இரண்டிலும் தக்க புலமையுடையவரும், காசிமடத்தின் தலைவராய் விளங்கியவருமான ஸ்ரீலஸ்ரீ சோக்கலிங்க சுவாமிகள் 23—2—30 பிற்பகலில் எல்லாம் வல்ல இறைவனடி சேர்ந்தார். இவர்கள் நமது கழகப் பதிப்புக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் வீதம் வாங்கி யுதவிபுரிந்து வந்தமை பெரிதும் பாராட்டற்பாலது. ஏனைய சைவ மடங்களில் இவ்வுதவிதானுமில்லை என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது. செந்தமிழ் நூல்களை அழகுறப் பதித்து வருகிற நமது கழகத்தின் அரிய செய்கையைக் கண்டு வியந்து நூற்பதிப்பின் பொருட்டுப் பெரும் பொருள் தருவதாக வாக்களித்ததை இளைய பட்டத்தினின்றும் இப்போது தலைவராய் எழுந்தருளியவரும், தமிழ்ப் புலமை சான்றவருமாகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் நிறைவேற்றித் தமிழ் நலமும் சைவ நலமும் பேணுவார்களென நம்புகின்றோம்.

ஓர் தமிழ்ப் பெரியாரின் பிரிவு

யாழ்ப்பாணத்து வட்டு நகர் சைவ வேளாண் குலத்துதித்தவரும் பதினாறு தலை முறைகளாகத் தமிழ்ப் புலமை சான்ற குடும்பத்துத் தலையாய்த் திகழ்ந்தவரும், தமது பதினெட்டாண்டு முதல் தொல்புரம் சித்தாந்த சைவ வித்தியாசாலையை நடப்பித்து யாழ்ப்பாணம் மேல் பற்றில் பல குலத்துப் பிள்ளைகளுக்கும் புராண படனம், இலக்கண இலக்கியம் ஆகியவற்றிற் கல்விபுகட்டி வந்தவரும், நவாலி, தொல்புரம், வட்டுநகர், சுழிபுரம் முதலிய இடங்களிலுள்ள பல கோயில்களிலும் கந்த புராணம், பெரிய புராணம், திருச் செந்தூர் மான்மியம், காசிகண்டம், திருவிளையாடற் புராணம் முதலிய நூல்களை ஆண்டுதோறும் படனஞ் செய்து வந்தவரும், பலநூல்களை ஆக்கியோனும், இளமையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் காட்சி நன்மொழி பெற்றவருமாகிய தமிழ்ப்புலவர், திருவாளர் கந்தையா பிள்ளை யவர்கள் சென்ற தைத் திங்கள் 16-ம் நாள் (29-1-30) புதன்கிழமை பிற்பகல் திருவருட்பேறு எய்திய செய்தி தெரியலானோம்.

இவர்கள் அன்று நாட் கடன்களை முடித்து இரவு ஊணுண்டு மூளாயிற் சில பார்ப்பனப் பிள்ளைகட்குப் பாடஞ் சொல்லிவைத்துத் திரும்பி ஆவின் கடனுமியற்றி நோயாளக் குழந்தைகட்குப் பார்வையுஞ் செய்து, 5 மணியளவில் சிற்றுணவுங் கொண்டு வெற்றிலைத் தோட்டத்தில் பாத்தி சரி பார்த்திருக்கையில் மயங்கி யுறங்கிச் சமாதி பெற்றன ரென்றறிந்து அவர்களது தூய இன்பமான இறப்பினைக் குறித்து வியப்புற்றோம்.

இவர்களது தலை முறையில் குஞ்சிக் குமாரர், வில்வராய முதலியார், சின்னத்தம்பிப் புலவர், முத்துக் குமாரர், சண்முகச் சட்டம்பியார், சுவாமி நாதர் முதலியோர் பாவலர் சரித்திரதீபகத்தில் காட்டப்பட்ட தமிழ்ப் புலவர்களாவர். சுன்னாகம் திரு. குமார சாமிப் புலவர், திரு. நா. கதிரை வேற்பிள்ளை முதலியோர் இவர்களது உற்ற நண்பர்களா யிருந்தனர்.

நமது செந்தமிழ்ச் செல்வி மாட்டு மிகுந்த அன்பு காட்டிய பெருந்தகையார். யாழ்ப்பாணமும் தமிழுலகமும், ஒரு பெரியாரை இழந்த தென்பது மிகையன்றே.

சைவ சித்தாந்த சங்கத்தார்.